අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) උපකාරක තක්සේරුව, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) உதவி மதிப்பீடு - 2026
General Certificate of Education (Adv.Level) Supportive Assessment, 2026

උපකාරක තක්සේරුව පත්‍රය සඳහා පිළිතුරු පත්‍රය I-II (දෙමළ මාධ්‍යය)
உதவி மதிப்பீடு வினாத்தாளுக்கான விடைப்பத்திரம I-II (மொழிமூலம் தமிழ்)
Answer sheet for the Supportive Assessment I-II (Tamil Medium)

දේශපාලන විද්‍යාව
POLITICAL SCIENCE
அரசியல் விஞ்ஞானம்

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

Answer sheet – I-II **விடைத்தாள் – I-II**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2026

அரசியல் விஞ்ஞானம்

புள்ளி வழங்கல் திட்டம்

வினாத்தாள் I

பகுதி A, பகுதி B என 02 பகுதிகளைக் கொண்டது.

வினாத்தாள் I - பகுதி A

நேரம்: 02 மணித்தியாலங்கள்
05 தெரிவுகளைக் கொண்ட 30 பல்தேர்வு வினாக்கள் (MCQ). எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 60 ஆகும்.

வினாத்தாள் I - பகுதி B

20 சுருக்க விடை வினாக்கள். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 40 ஆகும்.

வினாத்தாள் ஐ க்கான மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

வினாத்தாள் II

நேரம்: 03 மணித்தியாலங்கள்
இவ்வினாத்தாள் பகுதி I, II, III என 03 பகுதிகளைக் கொண்டது.
பகுதி I இலிருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவும், பகுதி II இலிருந்து குறைந்தபட்சம் இரண்டு வினாக்களும், பகுதி III இலிருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவும் உள்ளடங்குமாறு, மொத்தமாக 05 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.
பகுதி I: 03 கட்டுரை மற்றும் பகுதி-அமைப்புக் (அரைகட்டமைப்பு) வினாக்கள் .
பகுதி II: 04 கட்டுரை மற்றும் பகுதி-கட்டமைப்பு வினாக்கள்.
பகுதி III: 03 பகுதி-கட்டுரை அமைப்பு வினாக்கள்.

வினாத்தாள் II இற்கான மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

இறுதிப் புள்ளி கணக்கிடுதல்

வினாத்தாள் I = 100
வினாத்தாள் II = 100
இறுதிப் புள்ளி = 200 ÷ 2 = 100

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

தேசிய மொழிகள் மற்றும் மானிடவியல் துறை

அரசியல் விஞ்ஞானம் பயிற்சி விடைத்தாள் - 2026

வினாத்தாள் 1 - பகுதி A

வினா இல	விடை இல	வினா இல	விடை இல	வினா இல	விடை இல
01	**4**	11	**1**	21	**1**
02	**1**	12	**3**	22	**5**
03	**2**	13	**3**	23	**5**
04	**2**	14	**2**	24	**2**
05	**1**	15	**3**	25	**2**
06	**5**	16	**1**	26	**1**
07	**2**	17	**4**	27	**4**
08	**5**	18	**3**	28	**2**
09	**4**	19	**3**	29	**3**
10	**4**	20	**4**	30	**5**

பகுதி B

31. முடியாட்சி

உயர்குடியாட்சி

சர்வாதிகார ஆட்சி

குழுவாட்சி (சில்லோராட்சி)

நேரடி ஜனநாயக ஆட்சி

நிலப்பிரபுத்துவ ஆட்சி

32. தமது நாட்டின் அரசியலைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமாயின், ஏனைய நாடுகளின் அரசியல் பற்றிய புரிதலைப் பெற்றுக்கொள்வது அவசியமானதாகும்.

ஒவ்வொரு நாட்டினதும் அரசியல் வரலாறு, அரசியல் பின்னணி மற்றும் அரசியல் நிறுவனங்கள் பற்றிய ஒப்பீட்டுப் புரிதல் இல்லாமல், அந்த நாடுகளின் அரசியல் குறித்து முறையான அறிவைப் பெற முடியாது.

33. அரிஸ்டோட்டில்

அலெக்சிஸ் டி தொக்வில்

34. நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றுவதன் மூலம்.

வருடாந்த வரவுசெலவுத் திட்டம் / ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தைத் தோற்கடிப்பதன் மூலம்.

அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் / சிம்மாசன உரையைத் தோற்கடிப்பதன் மூலம்.

35. தலைமைத்துவத்தின் பண்பின் அடிப்படையில்

அரசாங்கத்தின் கட்டமைப்பின் அடிப்படையில்

அரசாங்கத்தின் கருத்தியல் கட்டமைப்பின் அடிப்படையில்

36. எகிப்து - அப்துல் கமால் நாசர்

தான்சானியா - ஜூலியஸ் நியராரே

இந்தியா - ஜவஹர்லால் நேரு

இலங்கை – S.W.R.D. பண்டாரநாயக்கா

கானா - குவாமே நிக்ரூமா

இந்தோனேசியா - சுகர்ணோ

பாகிஸ்தான் - அலி பூட்டோ

37. முடியாட்சிகள்

கோத்திர அரசுகள்

38. சமூக மட்டம்

உளவியல் மட்டம்

அரசியல் மட்டம்

39. 1833 கோல்புறூக் - கெமரன் அரசியலமைப்புச் சீர்திருத்தம்

1931 டொனமூர் அரசியலமைப்புச் சீர்திருத்தம்

40. 1978 அரசியலமைப்பில் ஜனாதிபதி பதவியிடம் நோக்கி அதிகாரம் குவிக்கப்பட்டிருத்தல்.

சட்டத்துறையையும் நீதித்துறையையும் நிறைவேற்றுத்துறையின் செல்வாக்கின் கீழ் கொண்டு வருதல்.

ஜனாதிபதிக்கு முழுமையான நீதித்துறை விலக்குரிமை வழங்கப்பட்டமையால் சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சியடைதல்.

மனித உரிமை மீறல்கள்.

ஆளுகைச் செயற்பாடுகளில் நிகழும் ஊழல்களும் அதிகார துஷ்பிரயோகங்களும்.

சிவில் சமூகம் இராணுவமயமாக்கப்படல்.

41. பிரதம காரியதரிசி

சபாநாயகர்

42. கொழும்பு மத்தி

கடுகண்ணாவை

பதுளை

பலங்கொடை

அம்பலாங்கொடை

பலபிட்டிய

43. அதிகார வேறாக்கக் கோட்பாடு

சமநிலைத் தலையீடுகள் கோட்பாடு

44. கொள்கை ஆலோசனை

கொள்கை தலைமைத்துவம்

கொள்கை பகுப்பாய்வு

45. தேசிய பேரவை

செனட் சபை

46. பாராளுமன்றம்

பொதுசன வாக்கெடுப்பின் போது பொதுமக்களால்

47. ஆளுநர் பதவி

முதலமைச்சர் மற்றும் அமைச்சர் சபை

48. இலங்கை தேசிய சங்கம்

இலங்கை சீர்திருத்தக் கழகம்

தொழிலாளர் கட்சி

49. உரிமைகளை அனுபவிப்பதிலுள்ள கட்டுப்பாடுகள் அதிகமாக இருத்தல்.

அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது எடுக்கப்பட வேண்டிய சட்ட வழிமுறைகள் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டிருக்காமை.

உயிர்வாழ்வதற்கான உரிமை ஓர் அடிப்படை உரிமையாகக் குறிப்பிடப்பட்டிருக்காமை.

தேசிய அரசுப் பேரவைக்கு 2/3 பெரும்பான்மை அதிகாரத்துடன் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தைத் திருத்துவதற்கும் நீக்குவதற்கும் அதிகாரம் காணப்பட்டமை.

சிவில் உரிமைகள் மீது அதிக முக்கியத்துவம் வழங்கப்படாமை.

50. பிரேசில்

சவூதி அரேபியா

ரஷ்யா

ஐக்கிய அரபு அமீரகம்

சீனா

ஈரான்

தென்னாப்பிரிக்கா

எகிப்து

ரஷ்யா

எத்தியோப்பியா

இந்தியா

பகுதி II

விடைகள்

விடைகளை கட்டமைப்பதற்கான ஆலோசனைகள்

- அறிமுகம்
- உள்ளடக்கம்
- முடிவுரை என்பன காணப்படல் வேண்டும்.
- நடைமுறை உதாரணங்கள், விமர்சனப்பாங்கு என்பன பற்றியும் கவனம் செலுத்த வேண்டும்.

1. மனிதன் அரசியலைப் புரிந்துகொள்ளும் விதங்களை விளக்குக. (20 புள்ளிகள்)

மனிதன் ஒரு சமூக / அரசியல் பிராணி. மனிதனின் பிறப்புப் பதிவு முதல் இறப்புச் சான்றிதழ் வரை அவன் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுகிறான். அரசியல் விடயங்களைப் புரிந்துகொள்கிறான். கிரேக்க அரசியல் தத்துவஞானியான அரிஸ்டோட்டில் தனது ”அரசியல்” (Politics) நூலில், ”மனிதன் ஒரு அரசியல் பிராணி, அரசியலின்றி வாழ்பவர் கடவுளாகவோ அல்லது மிருகமாகவோதான் இருக்க முடியும்” எனக் குறிப்பிட்டுள்ளார். இதற்கமைய மனிதன் பல்வேறு வழிகளில் அரசியலைப் புரிந்துகொள்கிறான். முறைசார்ந்த, முறைசாரா, திட்டமிட்ட மற்றும் திட்டமிடப்படாத வழிகளின் ஊடாக அவன் அரசியல் அறிவைப் பெறுகிறான். மனிதன் அரசியலைக் கற்கும் வழிகளை இரண்டு பிரதான பிரிவுகளாக நோக்கலாம்:

- பிரயோக ரீதியாக (நடைமுறையில்) அரசியலைப் விளங்கிக்கொள்ளல் (அரசியல் சமூக பயன்பாடொன்றாக)
- கல்விசார் / கோட்பாட்டு ரீதியாக அரசியலை விளங்கிக் கொள்ளல்

பிரயோக ரீதியாக அரசியலைப் புரிந்துகொள்ளல் (முறைசாரா வழிமுறை): என்பது, மனிதன் தான் வாழும் சமூகச் சூழலின் ஊடாக அரசியலைத் தானாகவே விளங்கிக் கொள்வதைக் குறிக்கும். இங்கு குறிப்பிட்ட ஆசிரியரோ அல்லது வழிகாட்டியோ இருப்பதில்லை. ஒரு ஒழுங்கமைப்பும் காணப்படாது. மனிதன் நடைமுறையில் அரசியல் அறிவைப் பெறும் காரணிகளாவன: குடும்பம், ஊடகங்கள், நண்பர் குழுக்கள், சிவில் சமூக அமைப்புகள், அரசியல் கட்சிகள், சமய நிறுவனங்கள் போன்றவையாகும்.

இவற்றுக்கு மேலதிகமாக, பாடசாலைகளில் இடம்பெறும் இணைப்பாடவிதான மற்றும் பாடத்திற்குப் புறம்பான பின்வரும் செயற்பாடுகளின் மூலமும் ஒரு நபர் முறைசாரா அல்லது பிராயோகிக அரசியல் புரிதலைப் பெறுகிறார்:

- மாணவர் பாராளுமன்றத் திட்டங்கள்.
- தலைமைத்துவப் பயிற்சி நெறிகள்.
- விளையாட்டு மைதானங்களில் வெற்றி தோல்விகளைத் தாங்கும் மனப்பக்குவம்.
- அரசியல்வாதிகள் கலந்துகொள்ளும் விழாக்கள்.
- தேசிய கீதம் இசைத்தல் மற்றும் தேசியக் கொடியேற்றல்.
- கூட்டங்கள் மற்றும் சங்கங்கள் போன்றவற்றின் மூலம் அரசியல் அறிவு பெறப்படுகிறது.

நன்மைகள்:

- நடைமுறை அரசியல் விடயங்களைப் புரிந்துகொள்ள முடிதல்.
- சமகால அரசியல் நிலைமைகள் பற்றிய அறிவைப் பெற முடிதல்.

தீமைகள்:

- தவறான அரசியல் கருத்துக்கள் பரப்பப்பட வாய்ப்பிருத்தல்.
- சார்புநிலையான (சார்புடைய) அரசியல் கருத்துக்கள் சென்றடைதல்.

கல்விசார் ரீதியாக அரசியலைக் கற்றல் (முறைசார் வழிமுறை): என்பது விஞ்ஞானபூர்வமாக அரசியலை ஆராய்வதாகும். அதாவது ஒரு குறிப்பிட்ட சட்டம் அல்லது கொள்கை ஒழுங்கமைப்பிற்கு அமைய அரசியலைக் கற்பதாகும். இதனை ஆய்வுகளின் மூலம் அரசியலைக் கற்றல் எனவும் வரையறுக்கலாம்.

ஒரு ஆசிரியர் அல்லது வழிகாட்டியின் கீழ் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் மூலம் அரசியல் கற்பது இதன் கீழ் வரும். அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டமொன்றின் கீழ், விரிவுரையாளர்கள் அல்லது ஆசிரியர்களின் வழிகாட்டலில் ஒரு குறிப்பிட்ட முறையியலுக்கு அமைய இது கற்பிக்கப்படுகிறது. பாடசாலை வகுப்பறைகளில் அரசியல் விஞ்ஞானம், வரலாறு, குடியுரிமைக் கல்வி, சமூகக் கல்வி, சட்டம், சர்வதேசக் கல்வி போன்ற பாடங்களின் ஊடாக அரசியல் விடயங்கள் பயிலப்படுகின்றன.

இதன் மூலம்:

- உண்மையான மற்றும் துல்லியமான அரசியல் விபரங்களைக் கற்க முடிகிறது.
- மனிதன் மிகவும் விழிப்புணர்வுள்ள, செயற்றிறன்மிக்க அரசியல் உயிரியாக மாறுவதற்கு கல்விசார் அறிவும், தெளிவான நடைமுறை அரசியல் புரிதலும் அவசியமாகின்றன.

2. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டைச் சுருக்கமாக ஆராய்க.

(10 × 2 = 20 புள்ளிகள்)

(i) நவ தாராள அரசு (Neo-liberal State)

மூன்றாம் உலக நாடுகளில் அரசு நலன்புரிக் கோட்பாடு வீழ்ச்சியடையத் தொடங்கியமை மற்றும் உலகளவில் சோசலிசம் பின்னடைவைச் சந்தித்தமை காரணமாக, உலக முதலாளித்துவப் பொருளாதார மற்றும் அரசியல் சக்திகள் உலகெங்கும் தடையின்றி நிலைபெறுவதற்கான சூழல் உருவானது.

இப்பின்னணியில், தேசிய அரசின் எல்லைகளைத் தாண்டி சந்தைப் பொருளாதார முறைமை வேகமாக விரிவடைந்தது. இந்த நிதி மூலதனத்தை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரம் சர்வதேச ரீதியில் செயற்பட்டதன் விளைவாக 'உலகமயமாதல்' (Globalization) என்ற எண்ணக்கரு உருவானது.

1960-களில் அரச நலன்புரிவாதம் படிப்படியாக நீக்கப்பட்டு, 'முகாமைத்துவ அரசு' **(Managerial State)** என்ற கருத்து பரவியது. தாராளவாத அரசை வெறும் ஆட்சி நிர்வாகத்திற்குள் மாத்திரம் மட்டுப்படுத்துவது நவ தாராளவாத அரசின் முக்கிய பண்பாகும்.

முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரம் உலகமயமாக்கப்பட்டதால், உலக அரசியல் சூழல் பாரிய மாற்றத்திற்கு உள்ளானது. இந்நிலைமையின் கீழ் தேசிய அரசு என்பது பெயரளவில் மாத்திரமே காணப்படுவதுடன், அரசு பொருளாதார நடவடிக்கைகளில் இருந்து விலகியிருப்பதும் இன்றியமையாததாக மாறியது.

அரசு எல்லைகளைக் கடந்து விரிவடைந்துள்ளது. சந்தையைக் கையாள்வதற்கு அரசு தலையிடுவதற்கான வாய்ப்புகள் குறைவடைந்துள்ளன.

இப்பின்னணியில் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள பணி யாதெனில், சுதந்திரச் சந்தைச் செயற்பாட்டிற்குத் தேவையான அமைதியான சூழலை ஏற்படுத்துதல், நீதியை நிலைநாட்டுதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் என்பனவாகும்.

இங்கு முகாமைத்துவம் எனக் குறிப்பிடப்படுவது, முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்தைச் சீராகக் கொண்டு நடத்துவதற்குத் தேவையான அனைத்துச் சூழல்களையும் தயாரிப்பதையும் வழிநடத்துவதையும் மையமாகக் கொண்ட முகாமைத்துவமாகும்.

நவ தாராளவாதக் கருத்துக்களை முன்வைத்த அரசியல் சிந்தனையாளர்களுள் ரொபர்ட் நோசிக் (Robert Nozick), பிரீட்ரிக் வொன் ஹயக் (Friedrich von Hayek), மில்டன் பிரீட்மேன் (Milton Friedman) ஆகியோர் முதன்மையானவர்களாவர்.

அரசின் அதிகாரம் ஒரு பொலிஸ் அதிகாரத்திற்கு மேல் இருக்கக் கூடாது என்றும், தனிமனிதனின் சொத்துரிமை மிகவும் முக்கியமானது எனவும் அது மீறப்படக் கூடாது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஏழைகளுக்காக முன்வைக்கப்படும் தீர்வு யாதெனில், அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs) மூலம் நிவாரணங்களை வழங்கும் வேலைத்திட்டமாகும். இதற்கமைய சர்வதேச ஏகாதிபத்தியத்தின் ஆதரவு பெற்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் கட்டமைப்பு உலகளவில் செயற்படுவதைக் காண முடிகிறது. இது நலன்புரி அரசைப் போல பரந்தளவிலான நேரடித் தலையீடு அல்ல. எனவே, அரசின் தலையீடற்ற கொள்கைக்கும் (Laissez-faire) நலன்புரிவாதத்திற்கும் இடைப்பட்ட ஒரு நிலையாக இந் ‘குறைந்தபட்ச அரசை’ (Minimal State) அடையாளப்படுத்தலாம்.

(ii) பின் காலனிய அரசு / பின்காலனித்துவ அரசு (Post-colonial State):

பின்காலனித்துவ அரசு என்பது, ஒரு காலத்தில் ஐரோப்பிய நாடுகளின் காலனிகளாக இருந்து, பின்னர் சுதந்திரம் பெற்ற நாடுகளின் அரசு கட்டமைப்பை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு கோட்பாட்டு வடிவமாகும். பின்காலனித்துவ அரசை ஒரு தனித்துவமான அரசு மாதிரியாகக் கோட்பாட்டு ரீதியாகக் கட்டியெழுப்பியவர் பாகிஸ்தானியப் பின்னணியைக் கொண்ட ‘ஹம்ஸா அலாவி’ (Hamza Alavi) என்ற கோட்பாட்டாளராவார்.

1972 ஆம் ஆண்டு ‘New Left Review’ இதழில் வெளியான ‘பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் சமூகங்களில் அரச பின் காலணித்துவம்’ (‘State in Post-colonial Societies: Pakistan and Bangladesh’) என்ற அவரது கட்டுரை இதற்கு அடிப்படையாக அமைந்தது.

ஹம்ஸா அலாவியின் கோட்பாடு மற்றும் ஏனைய அணுகுமுறைகளின் அடிப்படையில், பின்காலனித்துவ அரசின் சிறப்பியல்புகளைப் பின்வருமாறு முன்வைக்கலாம்:

- பின்காலனித்துவ சமூகங்களிலுள்ள அரசானது, அந்தச் சமூகங்களில் காணப்பட்ட காலனித்துவ அரசு கட்டமைப்பை அப்படியே முன்னோக்கிக் கொண்டு செல்வதாக அமைந்தது.
- பெரும்பாலான பின்காலனித்துவ நாடுகளில் ஜனநாயகப் பரிமாற்றம் வெற்றிகரமாகவோ அல்லது நீண்டகாலம் நிலைத்திருக்கக்கூடியதாகவோ அமையவில்லை.
- இராணுவச் சதிப்புரட்சிகள் மூலம் ஜனநாயக ஆட்சிகள் கவிழ்க்கப்படுவதும், அதிகாரத்துவ ஆட்சிகள் உருவாவதும் இச்சமூகங்களின் பொதுவான பண்புகளாக மாறியுள்ளன. (உதாரணம்: மியன்மார், பாகிஸ்தான்). இதற்கு விதிவிலக்காக அமைந்தவை இந்தியா, இலங்கை போன்ற ஒரு சில பின்காலனித்துவ சமூகங்கள் மாத்திரமேயாகும்.

- பின்காலனித்துவ அரசின் தனித்துவமான பண்பு யாதெனில், அந்த நாடுகளில் ஒப்பீட்டளவில் பலம்வாய்ந்த இராணுவ மற்றும் சிவில் அதிகாரத்துவக் கட்டமைப்புகள் (Bureaucracy) அரசின் மத்திய நிறுவனங்களாகச் செயற்படுவதாகும்.
- இவை காலனித்துவ ஆட்சிக் காலத்திலேயே கட்டியெழுப்பப்பட்டவை. காலனித்துவத்திலிருந்து கிடைத்த அரசியல் சுதந்திரத்தால் இக்கட்டமைப்புகள் மாறவில்லை. இவை அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அரசியல் நிறுவனங்களை விடவும் அதிகாரம் மிக்கவையாகக் காணப்பட்டன.
- அரசியல் கட்சிகளை விட இராணுவ மற்றும் அதிகாரத்துவக் கட்டமைப்பு ஓங்கி நிற்பது, பின்காலனித்துவ அரசு ஜனநாயகமயப்படுவதற்குக் காணப்படும் ஒரு பாரிய கட்டமைப்பு ரீதியான தடையாகும். இவ்வரசுகள் இன்னமும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளாகவே செயற்படுகின்றன என்பதுடன், நவீனமயமாக்கப்படாத அரசியல் கலாசாரத்தையும் கொண்டுள்ளன.

(iii) சமூக ஒப்பந்தக் கோட்பாடு (Social Contract Theory)

மத்திய காலத்திற்குப் பிந்திய ஐரோப்பாவில், அரசு அதிகாரத்தை நியாயப்படுத்துவதற்காகக் காணப்பட்ட ‘அரசின் தெய்வீக வழியுரிமைக் கோட்பாடு’ (Divine Right Theory) வீழ்ச்சியடைந்த பின்னணியில் சமூக ஒப்பந்தக் கோட்பாடு எழுச்சி பெற்றது. அதுவரை தெய்வீகப் பிறப்பாகக் கருதப்பட்ட அரசிற்குச் சமூக ரீதியான பெறுமதியை வழங்கி, அது ஒரு சமூகத் தோற்றம் என்ற கருத்தை முன்வைக்க இக்கோட்பாட்டால் முடிந்தது. இக்கோட்பாட்டை முன்வைத்த மூன்று முக்கிய முன்னோடிகளை அடையாளப்படுத்தலாம்:

- தோமஸ் ஹொப்ஸ் (Thomas Hobbes)
- ஜோன் லொக் (John Locke)
- ஜீன் ஜெக் ரூசோ (Jean-Jacques Rousseau)

தோமஸ் ஹொப்ஸ்:

அரசு என்பது ஒரு சமூக ஒப்பந்தத்தின் மூலமே உருவானது என்ற கருத்தை முதன்முதலில் முன்வைத்தவர் தோமஸ் ஹொப்ஸ் ஆவார். கி.பி. 1588-1679 காலப்பகுதியில் பிரித்தானியாவில் வாழ்ந்த இவர், 1651 இல் வெளியிட்ட தனது ‘லெவியாதன்’ (Leviathan) எனும் நூலின் மூலம் இக்கருத்தை முன்வைத்தார். இங்கிலாந்தில் மன்னராட்சிக்கு எதிராக ஏற்பட்ட புரட்சியின் போது, நிலவும் மன்னராட்சியைப் பலப்படுத்துவதற்காக இக்கருத்தை அவர் முன்வைத்தார். அவர் சமூகத்தை இரண்டு பிரிவுகளாகக் காட்டுகிறார். அரசு தோன்றுவதற்கு முன் எவ்வித ஆளுமையுமற்ற ‘இயற்கை நிலை’ (State of Nature) காணப்பட்டதாகவும், அந்நிலையில் வாழ்ந்த மனிதர்கள் சுயநலவாதிகளாகவும் காட்டுமிராண்டிகளாகவும் இருந்தனர் எனக் குறிப்பிடுகிறார். அந்நிலையில் மனித இனம் அழிந்துவிடும் என அஞ்சிய மனிதர்கள், தங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஒரு ஒப்பந்தத்திற்கு வந்தனர். அந்த ஒப்பந்தத்தின்படி, பொதுமக்கள் தங்களுக்குரிய அனைத்து அதிகாரங்களையும் ஆட்சியாளரிடம் ஒப்படைத்தனர் என்பது ஹொப்ஸின் கருத்தாகும். இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஆட்சியாளர் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டதும் அரசு உருவானதுடன், சிவில் சமூகமும் தோற்றம் பெற்றது (சிவில் சமூக நிலை). அச்சிவில் சமூகத்தில் ஆட்சியாளர் ஒப்பந்தத்தின்படி வரம்பற்ற அதிகாரங்களைப் பயன்படுத்தி மக்களை ஆளுகிறார். இந்த ஆட்சியாளர் எக்காலத்திலும் மக்களுக்கு அல்லது ஒப்பந்தத்திற்குப் பொறுப்புக்கூற வேண்டியதில்லை. அவர் ஒப்பந்தத்தின் ஒரு தரப்பினர் அல்லர். மேலும் ஆட்சியாளரை எதிர்ப்பதற்கு மக்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என அவர் சுட்டிக்காட்டுகிறார்.

ஜோன் லொக்:

பிரித்தானியரான ஜோன் லொக்கும் அரசு சமூக ஒப்பந்தத்தாலேயே உருவானது என்பதை ஏற்றுக்கொள்கிறார். அரசு தோன்றுவதற்கு முந்தைய இயற்கை நிலை மிகவும் அமைதியான ஒன்றாகக் காணப்பட்டது என்பது இவரது கருத்தாகும். ஆனால் காலப்போக்கில், அச்சிவில் சமூகத்தில் சொத்துக்களை மையமாகக் கொண்டு சிறிய மோதல்கள் வெடித்தன. இம்மோதல்கள் தீவிரமடையலாம் என எண்ணிய மக்கள் ஒன்றிணைந்து ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டனர். இவ்வொப்பந்தத்தின்படி, சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பது போன்ற பணிகளுக்காக மாத்திரம் வரையறுக்கப்பட்ட அதிகாரமே ஆட்சியாளருக்கு வழங்கப்பட்டது. மக்கள் தங்கள் அதிகாரத்தைச் சமூகத்திற்கு வழங்குவதற்காக ஏற்படுத்திக் கொள்ளும் உடன்படிக்கை 'சமூக ஒப்பந்தம்' எனப்பட்டது, இது முதலாவது கட்டமாகும். 'அரசு ஒப்பந்தம்' என்பது சமூகத்திற்கும் ஆட்சியாளருக்கும் இடையே ஏற்படும் ஒப்பந்தமாகும். ஆட்சியாளரும் அரசும் இவ்வொப்பந்தத்தின் விளைவாகவே தோன்றுகின்றனர். லொக்கின் படி, அரசு உருவானதன் பின்னர் தோன்றும் சமூகம் சர்வாதிகார சமூகமாக அமையாது, வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட ஒரு ஜனநாயக ஆட்சியாளரே ஒப்பந்தத்தின் மூலம் உருவாவார் என ஜோன் லொக் குறிப்பிடுகிறார்.

ரூசோ:

பிரான்ஸ் நாட்டவரான ரூசோவும் தனது 'சமூக ஒப்பந்தம்' (The Social Contract) எனும் நூலின் மூலம் அரசு சமூக ஒப்பந்தத்தாலேயே உருவானது என்பதை ஏற்றுக்கொள்கிறார். இவரும் அரசு தோன்றுவதற்கு முந்தைய இயற்கை நிலை மிகவும் அமைதியானதாக இருந்தது எனக் குறிப்பிடுகிறார். ஆனால் பிற்காலத்தில், 'சொத்து' என்ற அழைக்கப்படாத விருந்தாளி நுழைந்ததால் சமூகத்தில் மோதல்கள் உருவாகின. இம் மோதல்களைத் தவிர்க்கும் நோக்கோடு மனிதன் சமூக ஒப்பந்தத்திற்கு வந்தான். இவ்வொப்பந்தத்தின்படி, உடன்படிக்கையானது மக்களுக்கும் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் இடையே ஏற்படுகிறது. இதன்படி மனிதர்கள் இயற்கை நிலையில் அனுபவித்த அதிகாரங்களை ஒப்பந்தத்தின் மூலம் ஒட்டுமொத்த சமூகத்திடமும் ஒப்படைக்கின்றனர். அதற்கமைய, ஒப்பந்தத்தின் பின்னர் தோன்றும் ஆட்சியாளரும் அரசும் ஒட்டுமொத்த சமூகமுமே ஆகும் என ரூசோ மேலும் வலியுறுத்துகிறார்.

(iv) குடியரசுவாதம் (Republicanism)

குடியரசுவாதம் என்ற எண்ணக்கரு தாராளவாதத்தைப் போன்றே ஓர் அரசியல் கருத்தியலாகவும், அரசியல் கோட்பாடு மற்றும் அரசியல் தத்துவம் என்ற வகைப்பாட்டிற்குள்ளும் அடங்குகிறது.

அரசியல் சமூகம், குடியுரிமை, சுதந்திரம் மற்றும் அரசியல் பற்றிய குடியரசுவாதக் கருத்துக்கள், நவீன அரசு மற்றும் அதன் தன்மை, நோக்கங்களைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளன. தாராளவாதமும் குடியரசுவாதமும் முற்றிலும் வேறுபட்ட அரசியல் கருத்துக்கள் அல்ல என்ற போதிலும், இவை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளைப் புரிந்துகொள்வது இக்கருத்துக்களைத் துல்லியமாக அடையாளப்படுத்த உதவும்.

குடியரசுவாதம் ஓர் அரசியல் எண்ணக்கருவாகவும், கருத்தியலாகவும் நீண்ட வரலாற்றைக் கொண்டது. அவ்வரலாறு கிரேக்க, உரோம யுகங்கள் வரை பின்னோக்கிச் செல்கிறது. குடியரசுவாதக் கருத்துக்களின் வளர்ச்சியை 4 கட்டங்களாகக் காட்டலாம்:

1. பழைமைக் குடியரசுவாதம் (Classical Republicanism)
2. ஐரோப்பிய மறுமலர்ச்சிக் காலக் குடியரசுவாதம்
3. 18 ஆம் நூற்றாண்டு பிரான்ஸ் மற்றும் அமெரிக்கக் குடியரசுவாதம்

4. 20 ஆம் நூற்றாண்டு குடியரசுவாதம்

இதன் சில முக்கிய கொள்கைகள்:

- முடியாட்சிவாதத்தை முற்றாக எதிர்க்கிறது. 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் தாராளவாதத்திற்கு இணையாக இது வளர்ச்சியடைந்தது.
- இறைமையின் (இறைமை அதிகாரத்தின்) உரிமையாளர்கள் பொதுமக்களாவர்.
- அரசின் தலைவர் பொதுமக்களின் வாக்குமூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இக்கருத்து 18 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே வளர்ச்சியடைந்தது.
- **பிரஜைகளின் நற்பண்பு (Citizen Virtue) செயற்படுத்தப்படல்:** பிரஜைகள் ஓர் அரசியல் சமூகமாக ஒழுங்கமைக்கப்பட்டிருப்பதன் நோக்கம் ஒவ்வொரு பிரஜைக்கும் பொது நன்மையை ஏற்படுத்துவதாகும்.
- **பிரஜைகளின் செயற்றிறனான பங்களிப்பு (Civic Activism) செயற்படுத்தப்படல்:** உரிமைகளை ஆட்சியாளர்களிடமிருந்து பாதுகாத்துக்கொள்வதற்காக பொதுமக்கள் எப்போதும் அரசியல் ரீதியாக விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என வலியுறுத்துகின்றது. இதற்காக எப்போதும் போராட வேண்டும்.

  தாராளவாதமும் குடியரசுவாதமும் பரஸ்பரம் தொடர்புடைய கருத்துக்களாக இருந்தபோதிலும், இவ்விரண்டு கருத்துருக்களுக்கும் இடையிலான வேறுபாடுகளைப் பின்வரும் பண்புகளின் ஊடாகவும் அறிந்துகொள்ளலாம்:

  1. சுதந்திரம் (Liberty)
  2. பிரஜையும் அரசியலும் (Citizen and Politics)

குறிப்பு : இக்கருத்துக்களை ஒன்றோடொன்று பகுப்பாய்வு செய்து தாராளவாதத்திற்கும் குடியரசுவாதத்திற்கும் இடையிலான வேறுபாடுகளைக் காட்ட வேண்டும்.

3. பின்வரும் அரசாங்க முறைகளில் எவையேனும் இரண்டின் பண்புகளை ஆராய்க.

(10 × 2 = 20 **புள்ளிகள்)**

(i) ஒற்றையாட்சி முறை (Unitary System):

அரசின் இறைமை அதிகாரம் எவ்வாறு பகிரப்பட்டுள்ளது அல்லது இறைமை அதிகாரம் எங்கு நிலைநிறுத்தப்பட்டுள்ளது என்பதன் அடிப்படையில் அரசாங்க முறைகளை வகைப்படுத்தலாம். இங்கு உலகில் காணப்படும் மிகவும் பிரபலமான அரசாங்க முறைகளாக ஒற்றையாட்சி மற்றும் சமஷ்டி ஆட்சி முறைகளை அடையாளப்படுத்தலாம். இறைமை அதிகாரம் முழுமையாக மத்திய அரசாங்கத்திடம் மாத்திரம் காணப்படுமாயின், அது ஒற்றையாட்சி முறை எனப்படும். இலங்கை, பெரிய பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் ஒற்றையாட்சி முறையைக் காணமுடியும்.

ஒற்றையாட்சி முறையின் பண்புகள்:

- அரசியலமைப்பின் மூலமே இறைமை அதிகாரம் தனியொரு மத்திய அரசாங்கத்திடம் குவிக்கப்பட்டுள்ளது. (உதாரணம்: இலங்கை, பிரான்ஸ், பிரித்தானியா, இத்தாலி, ஸ்பெயின்).
- மத்திய அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படும் சட்டங்களின் ஊடாகவே பிராந்திய அலகுகளுக்கு (துணைநிலை தேசிய நிறுவனங்கள்) அதிகாரங்கள் பரவலாக்கப்படுகின்றன.

- பிராந்திய அலகுகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் திருத்துவதற்கும் அல்லது இரத்து செய்வதற்கும் மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு.
- நிலப்பரப்பால் சிறிய, மக்கள் தொகை குறைந்த நாடுகளுக்கு இது மிகவும் பொருத்தமானது.
- இனப் பிரிவினைகள் அல்லது பல்லினத் தன்மை குறைந்த நாடுகளுக்குப் பொருத்தமானது.
- சமஷ்டி ஆட்சிகளுடன் ஒப்பிடும் போது எளிமையானதும் வினைத்திறனானதுமான ஓர் அரசாங்க முறையாகும். ஒரேயொரு மத்திய அரசாங்கத்தின் மூலம் நாட்டின் ஆட்சி நிர்வாகம் முன்னெடுக்கப்படுகிறது.
- மத்திய அரசாங்கத்தின் சட்டத்துறை பெரும்பாலும் ஓரவை (Unicameral) கொண்டதாக இருக்கும்.
- ஒற்றைக் குடியுரிமையைக் கொண்டது.

நிறைகள்

- அவசரகால மற்றும் நெருக்கடி நிலைமைகளை மிகச் சிறந்த முறையில் எதிர்கொள்ளும் ஆற்றல் கொண்டது.
- வெற்றிகரமான வெளியுறவுக் கொள்கையைச் செயற்படுத்த முடியும்.
- ஒரேயொரு மத்திய அரசாங்கம் மாத்திரம் ஆட்சி செய்வதால் நிர்வாகச் செலவுகள் குறைவாகும்.
- ஒற்றை மத்திய அரசாங்கம் காணப்படுவதால் அரசியல் அதிகாரம் ஸ்திரமாக இருக்கும்.

குறைகள்

- மத்திய அரசின் அதிகாரத்தைப் பிராந்திய அலகுகளால் கட்டுப்படுத்த (தடுக்க) முடியாததால் ஜனநாயகம் பலவீனமடைய வாய்ப்புண்டு.
- ஒப்பீட்டளவில் சிறிய அரசுகளாக இருப்பதால் சர்வதேச ரீதியில் ஏற்படும் அழுத்தங்கள் அதிகமாக இருக்கும்.
- ஒற்றையாட்சி முறையில் பல இனங்கள் வாழுமாயின் மோதல்கள் உருவாக வாய்ப்புண்டு.
- அனைத்து அதிகாரங்களையும் நடைமுறைப்படுத்தும் இறுதி அதிகாரம் மத்திய அரசிடமே உள்ளது.

(ii) சமஷ்டி ஆட்சி முறை (Federal System):

அரசின் இறைமை அதிகாரம் பகிரப்படும் தன்மையின் அடிப்படையில் அரசாங்க முறைகள் வகைப்படுத்தப்படுகின்றன. அரசியலமைப்பின் மூலம் இறைமை அதிகாரமானது மத்திய அரசாங்கத்திற்கும் மாநில (பிராந்திய/மாகாண) அரசாங்கங்களுக்கும் இடையே பிரித்தளிக்கப்பட்டிருக்குமாயின் அது சமஷ்டி ஆட்சி எனப்படும். ஐக்கிய அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பெல்ஜியம், கனடா போன்ற நாடுகளில் சமஷ்டி ஆட்சி முறை காணப்படுகிறது.

சமஷ்டி ஆட்சி முறையின் பண்புகள்:

- அரசியலமைப்பின் ஊடாகவே மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் இறைமை அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படும். (உதாரணம்: அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, பெல்ஜியம், கனடா).
- அரசியலமைப்பால் அதிகாரங்கள் இரு தரப்பிற்கும் பகிர்ந்தளிக்கப்படுவதால் மாநில அரசுகளின் அதிகாரம் சுயாதீனமானது. மத்திய அரசாங்கத்தால் மாநில அரசுகளின் அதிகாரத்தை தன்னிச்சையாக இரத்து செய்ய முடியாது.
- தேசிய மட்டத்திலான அதிகாரங்களாகக் கருதப்படும் தேசிய பாதுகாப்பு, நாணயம், வெளியுறவு போன்ற முக்கிய அதிகாரங்கள் மத்திய அரசிடமும் விவசாயம், கல்வி, சுகாதாரம் போன்ற அதிகாரங்கள் மாநில அரசுகளிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கும்.
- மத்திய மற்றும் மாநில அரசுகளின் கூட்டுறவோடு நாட்டின் ஆட்சி நிர்வாகம் நடத்தப்படுகிறது.
- மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் என இரு மட்டங்களிலான அரசாங்கங்கள் காணப்படும்.
- இரட்டைக் குடியுரிமையைக் (Dual Citizenship) கொண்டது.

நன்மைகள்

- நிலப்பரப்பில் பெரிய நாடுகளுக்கு இது மிகவும் பொருத்தமானது.
- இன, மொழி, கலாசாரப் பிரிவினைகள் (பல்லினத்தன்மை) அதிகமுள்ள நாடுகளுக்குப் பொருத்தமானது.
- சிக்கலான மற்றும் செலவு கூடிய, வினைத்திறன் குறைந்த அரசாங்க முறையாகக் கருதப்படுகிறது.
- மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தை மாநில அரசுகள் கட்டுப்படுத்தவோ அல்லது சமநிலைப்படுத்தவோ முடிவதால் ஜனநாயகம் பாதுகாக்கப்படுகிறது.
- பல பிராந்தியங்கள் ஒன்றிணைந்து ஒரு பெரிய சமஷ்டி அரசு உருவாவதால், அத்தகைய அரசுகளுக்கு சர்வதேச ரீதியில் கிடைக்கும் அங்கீகாரமும் பாதுகாப்பும் அதிகமாகும்.
- பெரும்பாலும் நாட்டின் நிலப்பரப்பு பெரியதாக இருப்பதால் இயற்கை வளங்கள் அதிகளவில் கிடைக்கும்.
- ஒப்பீட்டளவில் இனங்களுக்கு இடையிலான மோதல்கள் ஏற்படுவது குறைவாகும்.

தீமைகள்

- அனைத்து மாநிலங்களையும் ஒருங்கிணைக்க வேண்டியிருப்பதால் வெற்றிகரமான வெளியுறவுக் கொள்கையைச் செயற்படுத்துவது கடினம்.
- இரு மட்டங்களில் அரசாங்கங்கள் இயங்குவதால் நிர்வாகச் செலவுகள் அதிகமாகும்.
- இரு மட்டங்களில் அதிகார மையங்கள் இருப்பதால் அரசியல் அதிகாரம் சில வேளைகளில் ஸ்திரமற்றதாகலாம்.
- அவசரகால மற்றும் நெருக்கடி நிலைமைகளை மிக வேகமாக எதிர்கொள்ளும் ஆற்றல் குறைவாகும்.

(iii) கூட்டுச் சமஷ்டி ஆட்சி முறை (Confederal System / Confederation):

- சமஷ்டி முறையின் ஒரு வடிவமாகக் கூட்டுச் சமஷ்டி முறையைக் குறிப்பிடலாம். சமஷ்டி ஆட்சி முறையைப் போன்றே இங்கும் மத்திய அரசாங்கத்திற்கு மேலதிகமாக மாநில அரசுகள் காணப்படும். ஆனால் இதன் சிறப்பம்சம் யாதெனில், மத்திய

அரசாங்கத்தின் அதிகாரம் பலவீனப்படுத்தப்பட்டு, மாநில (கன்டன்) அரசுகளின் அதிகாரம் ஓங்கி நிற்கும் நிலை காணப்படுவதாகும்.

- கூட்டுச் சமஷ்டி (Confederation) என்பதன் அர்த்தம் 'உடன்பாடு' அல்லது 'இணக்கம்' என்பதாகும். ஏதேனும் முக்கிய பிரச்சினைகளின் போது, அதுவரை சுதந்திரமாக இயங்கிய அரசுகள் ஒன்றிணைந்து ஓர் ஒப்பந்தம் அல்லது உடன்பாட்டின் மூலம் ஓர் அரசாகச் செயற்படுவது இங்கு நிகழ்கிறது.
- பாதுகாப்பு, வெளியுறவுத் தொடர்புகள் மற்றும் பொது நாணயம் தொடர்பான விவகாரங்களில் இத்தகைய உடன்பாடுகள் எட்டப்படுகின்றன. அதாவது, குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில், இறைமையுள்ள நாடுகள் மத்திய அரசாங்கத்திற்கு வரையறுக்கப்பட்ட அதிகாரங்களை மாத்திரம் வழங்கி, மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்கி இக்கூட்டுச் சமஷ்டி முறையை உருவாக்குகின்றன.
- கூட்டுச் சமஷ்டி முறையில் இவ்வாறு இணையும் சுதந்திர அரசுகள் தங்களது தனித்துவத்தைக் கைவிடாமல் செயற்படுவது இதன் சிறப்பம்சமாகும். இதனால் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கிடைக்கிறது.
- மத்திய அரசாங்கத்திற்கு வழங்கப்படும் அதிகாரங்களைத் தீர்மானிப்பதும் மாநில அரசுகளே ஆகும். ஆரம்பத்தில் ஒப்பந்தம் மூலம் இணையும் நாடுகள் பின்னர் அரசியலமைப்பொன்றின் மூலம் அதிகாரப் பகிர்வைச் செய்கின்றன. முதலாவது கட்டத்தில் மத்திய அரசிற்குப் பாதுகாப்பு, வெளியுறவு, நிதி மற்றும் நீதி போன்ற அதிகாரங்கள் ஒப்படைக்கப்படும். மாநிலங்களுக்குச் சுகாதாரம், கல்வி, நெடுஞ்சாலைகள் போன்ற நலன்புரித் துறைகளின் அதிகாரங்கள் வழங்கப்படும். இதற்கமைய முதற்கட்ட முடிவில் மாநிலங்களை விட மத்திய அரசு பலமானதாகத் தோன்றும்.
- ஆனால் இரண்டாவது கட்டத்தில், மத்திய அரசின் அதிகாரங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு அதில் ஒரு பகுதி மாநிலங்களுக்கு வழங்கப்படும். இதனால் இறுதியில் மாநிலங்கள் பலமடைந்து மத்திய அரசு பலவீனமடையும்.
- கூட்டுச் சமஷ்டி முறைக்கு வரலாற்று ரீதியான சிறந்த உதாரணம்: 1776 - 1787 காலப்பகுதியில் அமெரிக்காவின் 13 மாநிலங்கள் ஒன்றிணைந்து 'Article of Confederation' என்ற பெயரில் கட்டியெழுப்பிய அமெரிக்க அரசாங்க முறையாகும்.
- இதற்கு மேலதிகமாக ஆரம்ப காலத்தில் கனடாவிலும் கூட்டுச் சமஷ்டி முறை காணப்பட்டது. தற்காலத்தில் சுவிட்சர்லாந்து, ஐக்கிய அரபு அமீரகம் (UAE) ஆகியவற்றை இதற்குரிய உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.
- **குறிப்பு : சமஸ்டி அரசாங்க முறையின் குறைநிறைகளை இதற்கும் ஏற்றால்போல் பயன்படுத்த வேண்டும்.**

4. '1833 கோல்புறூக் அரசியல் சீர்த்திருத்தமானது பழைய யுகத்தின் முடிவையும் புதிய யுகத்தின் ஆரம்பத்தையும் குறித்து நிற்கின்றது". ஆராய்க. (20 புள்ளிகள்)

இலங்கை 1505 - 1658 வரை போர்த்துக்கேயராலும், 1658 - 1796 வரை ஒல்லாந்தராலும், 1796 - 1948 வரை ஆங்கிலேயராலும் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. எனினும் இவர்களுள் இலங்கையில் ஆழமான செல்வாக்கைச் செலுத்தியவர்கள் ஆங்கிலேயர்களாவர். ஆங்கிலேயர்கள் 1796 முதல் 1815 வரை இலங்கையின் கரையோரப் பகுதிகளை மாத்திரம் ஆட்சி செய்ததுடன், 1815 இன் பின்னர் முழு இலங்கையையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். ஆங்கிலேயர்கள் இலங்கையைக் கைப்பற்றியதன் பின்னணியில் இரண்டு பிரதான நோக்கங்கள் காணப்பட்டன:

1. தமது தாய்நாட்டின் (பிரித்தானியா) தொழிற்துறைகளுக்குத் தேவையான மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளல்.

2. தாய்நாட்டு உற்பத்தியாளர்களுக்கான சந்தையை உருவாக்கிக் கொள்ளல்.

இதற்கமைய பிரித்தானியர்கள் தமது தேவைகளுக்கு ஏற்ப இலங்கையை ஆளத் தொடங்கினர். எனினும், காலனித்துவத்தை நடத்துவதன் மூலம் எதிர்பார்த்த நோக்கங்களை முழுமையாக அடைய முடியவில்லை என்பதை உணர்ந்தனர். இதுகுறித்த விபரங்களை ஆராய்வதற்காக ஒரு ஆணைக்குழுவை இலங்கைக்கு அனுப்பத் தீர்மானித்தனர். அதன்படி 1829 இல் வில்லியம் கோல்புறூக் (William Colebrooke) என்பவரும் 1830 இல் சார்லஸ் கெமரன் (Charles Hay Cameron) என்பவரும் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர். இவர்கள் இருவரும் இலங்கை முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு அமைப்புகள் மற்றும் தனிநபர்களிடம் விபரங்களைச் சேகரித்து ஒரு பரந்த அறிக்கையைப் பிரித்தானிய அரசாங்கத்திடம் சமர்ப்பித்தனர். இதுவே '1833 கோல்புறூக் - கெமரன் பரிந்துரைகள்' அல்லது 'கோல்புறூக் சீர்திருத்தம்' என அழைக்கப்படுகிறது. பிரித்தானியர்கள் இச்சீர்திருத்தத்தை முன்வைக்கப் பல காரணங்கள் செல்வாக்குச் செலுத்தின:

- காலனியைப் பராமரிப்பதில் பாதுகாப்பு மற்றும் நிர்வாகச் செலவுகளைக் குறைத்துக் கொள்ளல் மற்றும் நேரடியாகக் காலனியை ஆட்சி செய்வதிலுள்ள சிரமங்கள்.
- தங்களுக்கு முன்னாலுள்ள புதிய சமூகத்தின் வாழ்க்கை முறைகளும் அபிலாஷைகளும் காலனித்துவவாதியின் கலாசாரத்துடன் ஒத்துப்போகாததால் அவற்றை மாற்றியமைத்தல்.
- காலனித்துவ அரசைத் தமது தாய்நாட்டின் அதிகபட்ச நன்மைக்காகப் பயன்படுத்திக் கொள்ளல்.

கோல்புறூக் சீர்திருத்தத்தின் ஊடாக முன்வைக்கப்பட்ட பிரதான பரிந்துரைகள்:

- முன்னர் காணப்பட்ட கண்டி, கரையோரம் போன்ற நிர்வாக பிரிவுகளுக்குப் பதிலாக பிரித்தானியர் இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை மத்தியமயப்படுத்தியமை (ஒருங்கிணைத்தல்).
- முன்னர் 16 மாகாணங்களாக காணப்பட்ட இலங்கையின் நிர்வாக மாகாணங்களின் எண்ணிக்கையை எண்ணிக்கையை ஐந்தாகக் குறைக்க நடவடிக்கை மேற்கொண்டமை.
- மரபார்ந்த பதவிமுறைகள் நீக்கப்பட்டு (திசாவை, கோரளை) ஆளுநரின் கீழ் அரச சேவையை மறுசீரமைத்தல்.
- சுதேச கல்விமுறையுடன் மிசனரி பாடசாலைகளைக் கொண்ட ஆங்கிலக் கல்வியை விரிவுபடுத்தல்.
- ஆளுநரின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டு அரசின் வர்த்தக ஏகபோக உரிமையை இரத்து செய்தல்.
- இராஜகாரிய முறையை ஒழித்தல்.
- ஆளுநரின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தல்.
- சட்டநிரூபண சபை (சட்டத்துறை) மற்றும் நிறைவேற்றுச் சபையை நிறுவுதல்.
- நீதிமுறையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள்
    - ஆளுநரிடம் காணப்பட்ட நீதித்துறை அதிகாரங்களை நீக்குதல்.
    - முழு நாட்டிற்கும் பொதுவான ஒற்றை நீதிமன்றக் கட்டமைப்பை நிறுவுதல்.
    - ஐரோப்பியர்களின் வழக்குகளை விசாரிப்பதற்காக உயர் நீதிமன்றத்தால் நடத்தப்பட்ட விசேட நீதிமன்றங்களை ஒழித்தல்.
    - சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளின் மேன்முறையீடுகளைப் பரிசீலிக்கும் அதிகாரத்தை உயர் நீதிமன்றத்திற்கு வழங்குதல்.

- ○ சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தை மாவட்ட நீதிமன்றங்களுக்கு வழங்குதல்.
- ○ ஒவ்வொரு பிரதான நகரங்களிலும் மாவட்ட நீதிமன்றங்களை நடத்துதல்.
- ○ பிரதம நீதியரசரின் கீழ் ஒரு சுயாதீன நீதித்துறையை நிறுவுதல் மற்றும் உயர் நீதிமன்றத்திற்கு அனைத்து நீதிமன்றங்களையும் நிர்வாகிக்கும் அதிகாரத்தை வழங்குதல்.

மேற்கூறப்பட்ட சீர்திருத்தப் பரிந்துரைகள் பிரித்தானிய அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டதன் மூலம் இலங்கையில் பாரிய அரசியல், பொருளாதார மற்றும் சமூக மாற்றங்கள் ஏற்பட்டன. பிரித்தானியர்கள் இலங்கையைக் கைப்பற்றும் போது இலங்கையில் நிலப்பிரபுத்துவ சமூகப் பொருளாதார முறையின் மீதான முடியாட்சி முறையே காணப்பட்டது. இக்கோல்புறூக் சீர்திருத்தத்தின் ஊடாக இலங்கைச் சமூகம் பிரதானமாக முதலாளித்துவப் பொருளாதார முறை, முதலாளித்துவ சமூக முறை மற்றும் தாராளவாத ஜனநாயக அரசியல் முறையாக மாற்றமடைந்தது.

அம்மாற்றங்கள் பின்வருமாறு:

- நிலப்பிரபுத்துவவாதம் வீழ்ச்சியடைந்தமை மற்றும் அதன் விளைவாக சாதியக் கட்டமைப்பு பலவீனமடைந்தமை.
- இனங்களுக்கு இடையிலான ஒற்றுமை சீர்குலைந்தமை (பிரித்தாளும் கொள்கை காரணமாக).
- பிரிவெனா (சமயக் கல்வி) கல்வி முறை வீழ்ச்சியடைந்தமை.
- குழுவாதத்திற்குப் பதிலாக தனிமனிதவாதத்தைப் போற்றும் சமூகத் தொடர்புகள் வளர்ச்சியடைந்தமை.
- சமூக அசைவியக்கம் (Social Mobility) வேகமடைந்ததன் மூலம் ஒடுக்கப்பட்ட பிரிவினர் தலைதூக்கத் தொடங்கியமை.
- ‘முதலாளித்துவ வர்க்கம்’ என்ற பெயரில் சமூகத்தில் ஆதிக்க வர்க்கமொன்று உருவானது.
- இரட்டைப் பொருளாதாரம் (Dual Economy) உருவானது.
- வர்த்தகப் பயிர்ச் செய்கை (பெருந்தோட்டப்பயிர்ச் செய்கை) ஆரம்பமானது.
- சுதந்திர உழைப்புச் சந்தை (சுதந்திர தொழிலாளர் சந்தை) உருவானது.
- உட்கட்டமைப்புத் துறைகள் (போக்குவரத்து, தொடர்பாடல்) வளர்ச்சியடைந்தன.
- காணிச் சந்தை (நிலச் சந்தை) உருவானது.
- உள்நாட்டு வர்த்தக சமூகமொன்று தோற்றம் பெற்றது.
- பொருட்களாக வரி செலுத்துவதற்குப் பதிலாகப் பணமாக வரி செலுத்தும் முறை ஆரம்பமானது.
- இறக்குமதி - ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கான அடித்தளம் இடப்பட்டது.
- மத்தியமயப்படுத்தப்பட்ட நிர்வாகத்திற்கான அடிப்படை உருவாக்கப்பட்டது.

5. 1931 டொனமூர் அரசியலமைப்பின் பின்வரும் பரிந்துரைகளைச் சுருக்கமாக விளக்குக.

(10 × 2 = 20 புள்ளிகள்)

(i) சர்வஜன வாக்குரிமை (Universal Franchise)

1833 முதல் இந்நாட்டில் இனவாரிப் பிரதிநிதித்துவ முறை (Communal Representation) செயற்பட்டதால் இனங்களுக்கு இடையே பதற்ற நிலை காணப்பட்டது. அத்துடன் 1910 குறு - மக்கலம் அரசியல் சீர்த்திருத்தத்தின் கீழ் சொத்து, பணம், கல்வி, மற்றும் பாலினத்தைக் கருத்திற் கொண்டு வரையறுக்கப்பட்ட வாக்குரிமை மூலமே பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வெறும் 4% மக்களுக்கு மாத்திரமே கிடைத்திருந்தது. இதனால் இந்நாட்டில் பிரபுத்துவக் குழுவாட்சி (Elite Oligarchy) ஒன்று உருவானது.

இந்நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக சொத்து, பாலினம், கல்வி அறிவு போன்றவற்றைத் தடையாகக் கருதாது, 21 வயதிற்கு மேற்பட்ட அனைத்து ஆண், பெண் இருபாலருக்கும் வாக்குரிமை வழங்க டொனமூர் ஆணைக்குழு பரிந்துரைத்தது. எனினும், டொனமூர் ஆணைக்குழு முன்வைத்த சர்வஜன வாக்குரிமைப் பரிந்துரையை இந்நாட்டின் பெரும்பாலான பிரபுத்துவப் பிரிவினர் எதிர்த்தனர். இலங்கை தேசிய சங்கம், இலங்கைத் தமிழர் சங்கம், சின்ஹல மஹா சபை என்பன அவற்றுள் அடங்கும். ஆனால் ஏ. ஈ. குணசிங்கவின் தொழிலாளர் சங்கமும், விக்டர் கொரயா போன்ற இளைஞர் அமைப்புகளும் மாத்திரமே இப்பரிந்துரையை ஆதரித்தன. பிரித்தானிய காலனிகளுள் ஆசியாவில் சர்வஜன வாக்குரிமையைப் பெற்ற முதலாவது நாடு இலங்கையாகும். பிரித்தானியாவில் இருபாலருக்கும் சர்வஜன வாக்குரிமை முழுமையாகக் கிடைத்தது 1928 ஆம் ஆண்டிலேயாகும்.

சர்வஜன வாக்குரிமையை வழங்கியதன் மூலம் டொனமூர் ஆணைக்குழு எதிர்பாத்த நோக்கங்கள்:

- இலங்கையில் பொறுப்புவாய்ந்த அரசாங்க முறையொன்றை ஏற்படுத்துதல்.
- இலங்கையின் ஜனநாயக ஆட்சியைப் பலப்படுத்துதல்.
- இனவாரிப் பிரதிநிதித்துவ முறையை ஒழித்தல்.
- நலன்புரி அரசு முறையொன்றைக் கட்டியெழுப்புதல்.
- சாதாரண மக்களின் சமூகத் தரத்தை உயர்த்துதல்.
- இந்நாட்டு மக்களின் அரசியல் பங்களிப்பையும் அறிவையும் பெருக்குதல்.
- கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடையிலான சமநிலையற்ற அபிவிருத்தியை ஒழித்தல்.
- இடதுசாரி இயக்கங்களைப் புரட்சிப் பாதையிலிருந்து விடுவித்து ஜனநாயகப் பாதைக்குக் கொண்டு வருதல்.

சாதகமான விளைவுகள்:

- பொறுப்புவாய்ந்த அரசாங்கங்கள் உருவாதல்.
- பிரதிநிதித்துவ ஜனநாயகத்திற்கு மக்கள் பழக்கப்படுதல்.
- நலன்புரிச் சேவைகள் விரிவடைதல் (இலவசக் கல்வி, இலவச சுகாதாரம் போன்றவை).
- சாதாரண மக்களின் சமூக அந்தஸ்து உயர்வடைதல்.
- பொதுமக்களின் அரசியல் அறிவு மற்றும் பங்களிப்பு அதிகரித்தல்.
- கிராமம் - நகரம் இடையிலான இடைவெளி குறைவடைதல்.
- முறையான அரசியல் கட்சிகள் தோற்றம் பெற வழிவகுத்தல்.

பாதகமான விளைவுகள்:

- இன ரீதியான மோதல்கள் தீவிரமடைதல்.
- மக்கள் எப்போதும் நலன்புரிச் சேவைகளில் மாத்திரம் தங்கியிருப்பவர்களாக மாறுதல்.
- தொடர்ச்சியாக நலன்புரிச் சேவைகளை வழங்கியதால் தேசிய வருமானம் வீழ்ச்சியடைதல்.
- தேர்தல்களின் போது சொத்துக்களுக்கும் உயிர்களுக்கும் சேதம் விளைவிக்கும் வன்முறைகள் தோன்றுதல்.

(ii) அரசுக் கழகம் (State Council):

டொனமூர் அரசியலமைப்பின் கீழ் சட்டத்துறை 'அரசுக் கழகம்' என அழைக்கப்பட்டது.

- இது ஓரவை (Unicameral) நிறுவனமாகும்.
- இதில் மொத்தம் 61 உறுப்பினர்கள் காணப்பட்டனர்:
  மக்கள் வாக்கு மூலம் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் - 50
  ஆளுநரின் நியமனம் மூலம் வருபவர்கள் - 08
  அரச அதிகாரிகள் - 03 (பிரதம செயலாளர், சட்டச் செயலாளர், நிதிச் செயலாளர்)
- இதன் பதவிக் காலம் 5 ஆண்டுகள் ஆகும் என்பதுடன், முதன்முறையாகச் சபாநாயகர் (Speaker) பதவியும் அறிமுகப்படுத்தப்பட்டது. அவரது தலைமையின் கீழ் அரசுக் கழகத்தின் பொது அமர்வுகள் நடைபெற்றன.
- சட்டவாக்க அதிகாரம் மட்டுமன்றி நிறைவேற்று அதிகாரமும் அரசுக் கழகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.
- எனினும், அரசுக் கழகம் அதிகார ரீதியாகப் பலவீனமான ஒரு நிறுவனமாகக் காணப்பட்டது. அதற்குப் பல காரணங்கள் இருந்தன:
- அரசுக் கழகத்தில் நிறைவேற்றப்படும் சட்டமூலங்களுக்கு அனுமதி வழங்கும் அதிகாரமும் அவற்றை நிராகரிக்கும் (Veto) அதிகாரமும் ஆளுநருக்கு வழங்கப்பட்டிருந்தமை.
- அரசியலமைப்பைத் திருத்தும் அதிகாரம் அரசுக் கழகத்திற்கு வழங்கப்படாமை.
- நிதி அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டிருந்தமை.
- அரசுக் கழகத்தை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கலைக்கும் அதிகாரம் ஆளுநரிடம் இருந்தமை.
- எனினும், டொனமூர் யுகத்தின் இறுதிக்காலத்தில் அது ஒரு டொமினியன் நாட்டின் சட்டத்துறையைப் போல பலம்வாய்ந்ததாக மாறியிருந்தது.

(iii) அமைச்சர் சபை (மந்திரிசபை) (Board of Ministers):

- டொனமூர் அரசியலமைப்பில் முதன்முறையாக அமைச்சர் சபையொன்று உருவாக்கப்பட்டது.
- அது 10 அமைச்சர்களைக் கொண்டிருந்தது:

  நிறைவேற்றுக் குழுக்களின் (Executive Committees) தலைவர்கள் - 07

  அரச உத்தியோகத்தர்கள் - 03

- இந்த அமைச்சர் சபையின் தலைவராகப் பிரதம செயலாளர் (Chief Secretary) காணப்பட்டார். அமைச்சர் சபைக் கூட்டங்களைக் கூட்டுவது அவரே ஆகும். அத்துடன் உப தலைவர் கோரும் சந்தர்ப்பங்களிலும் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும்.

- ஏனைய அமைச்சர்களுள் ஒருவர் அமைச்சர் சபையின் உப தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரே அரசுக் கழகத்தின் சபை முதல்வராகவும் (Leader of the House) செயற்பட்டார்.
- அமைச்சர் சபைக் கூட்டத்தின் நடப்பெண் (Quorum) என்பது 3 அரச அதிகாரிகளும் மற்றும் 3 அமைச்சர்களுமாகும்.
- நிறைவேற்றுக் குழுவின் சாதாரண உறுப்பினரை விட அமைச்சருக்குத் (குழுத் தலைவர்) தனிப்பட்ட அதிகாரம் அதிகமாக இல்லாவிட்டாலும், குழுவின் வாக்கெடுப்பில் சமநிலை ஏற்படும் போது தீர்மானிக்கும் வாக்கை (Casting Vote) பயன்படுத்தும் உரிமை அமைச்சருக்கு இருந்தது. திணைக்களத் தலைவர்களுக்குக் கட்டளையிடும் அதிகாரமும் அமைச்சர்களுக்குக் கிடைத்தது.

பணிகள்:

- அரசாங்கத் திணைக்களங்களின் பணிகளைக் கட்டுப்படுத்தல்.
- சட்டங்கள் மற்றும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்.
- தமது நிறைவேற்றுத் துறைகளைச் சீராக நிர்வகித்தல்.

ஆரம்பத்திலிருந்தே அமைச்சர் சபையானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு (அதிகாரிகள்) எனப் பிரிந்த ஒரு நிலையைக் காட்டியது. மறுபுறம், அக்காலத்தில் இலங்கையில் முறையான அரசியல் கட்சி முறை இல்லாததால் உள்நாட்டு அமைச்சர்களுக்கு இடையேயும் ஒற்றுமை காணப்படவில்லை. அவர்கள் கூட்டுப் பொறுப்புடன் (Collective Responsibility) செயற்படவில்லை. வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தை நிறைவேற்றும் போது மாத்திரமே அவர்கள் ஓரளவுக்கு இணைந்து செயற்பட்டனர். எவ்வாறாயினும் இறுதிக்காலத்தில் அவர்கள் ஓரளவு ஒற்றுமையாகச் செயற்படுவதைக் காண முடிந்தது.

6. (i) வெஸ்ட்மினிஸ்டர் (Westminster) அரசாங்க மாதிரியில் காணப்படும் ஐந்து பண்புகளைக் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

1. அரசியலமைப்பு கட்டமைப்பில் பாராளுமன்றம் மத்திய இடத்தைப் பெறுதல்.
2. பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக்கூறும் அமைச்சரவை (Cabinet) காணப்படல்.
3. பாராளுமன்றம் சட்ட ரீதியாக உயரிய நிலை (Supreme) பெற்றிருத்தல்.
4. இருவகையான நிறைவேற்றுத்துறைகள் காணப்படல் (உண்மை நிர்வாகம் மற்றும் நாம நிர்வாகம்)
5. அரசாங்கம் பாராளுமன்றத்தினால் கட்டுப்படுத்தப்படல்.
6. பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிலிருந்து அரசாங்கம் (அமைச்சரவை) உருவாக்கப்படல்.
7. அரசாங்கம் பாராளுமன்றத்திற்கு கூட்டுப் பொறுப்புடையதாக இருத்தல்.
8. பாராளுமன்றத்தின் அதிகாரத்தை நீதித்துறை நேரடியாகக் கேள்விக்குட்படுத்த முடியாதவாறு நீதிமன்றத்தின் பங்கு வரையறுக்கப்பட்டிருத்தல்.
9. தொகுதிவாரிப் பிரதிநிதித்துவ (FPP) முறையை அடிப்படையாகக் கொண்ட இருகட்சி முறை காணப்படல்.

(ii) 1947 சோல்பரி அரசியலமைப்பு மற்றும் 1972 முதலாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் அரச சேவையின் செயற்பாட்டை ஒப்பீட்டு ரீதியாக ஆராய்க. (15 புள்ளிகள்)

1947 சோல்பரி அரசியலமைப்பின் கீழ் அரச சேவை அல்லது நிரந்தர நிறைவேற்றுத்துறையானது பெரும்பாலும் அரசியல் செல்வாக்குகளின்றி சுயாதீனமாக இயங்குவதற்கான வழிமுறைகள் காணப்பட்டன. ஆனால் 1972 முதலாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் அரச சேவை அரசியல்மயமாக்கப்பட்ட (Politicized) ஒரு நிலையைக் காண முடிந்தது.

சோல்பரி அமைப்பில் உயர் அரச அதிகாரிகள் பிரதமரின் பரிந்துரையின் பேரில் மகாதேசாதிபதியால் (Governor-General) நியமிக்கப்பட வேண்டும் என்பதுடன், வருடாந்த சம்பளம் 4080 ரூபாவிற்கு குறைவான அரச ஊழியர்களை நியமித்தல், இடமாற்றம் செய்தல், பதவியிலிருந்து நீக்குதல், ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும் பதவியுயர்வு வழங்குவதற்காக ஒரு சுயாதீன அரச சேவை ஆணைக்குழு (Public Service Commission) நிறுவப்பட்டிருந்தது.

அது மூன்று உறுப்பினர்களைக் கொண்டதுடன், பிரதமரின் பரிந்துரையின் பேரில் மகாதேசாதிபதியால் 5 ஆண்டுகாலப் பகுதிக்கு நியமிக்கப்பட்ட ஓர் ஆணைக்குழுவாகும். பாராளுமன்ற உறுப்பினர்களோ, அரச அதிகாரிகளோ இதில் உறுப்பினராக முடியாது. அரசியல் தலையீடின்றி அடிமட்ட அரச சேவையை நிர்வகித்தது இந்த அரச சேவை ஆணைக்குழுவே ஆகும். இந்த ஆணைக்குழுவிற்கு எவரும் அழுத்தம் கொடுக்க முடியாது என்பதுடன், அழுத்தம் கொடுப்பவருக்கு 1000 ரூபா அபராதம், ஓராண்டு சிறைத்தண்டனை அல்லது இவ்விரண்டு தண்டனைகளும் வழங்கப்பட முடியும். எனினும் ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு எதிராக மேன்முறையீடு செய்ய இடமிருந்தது.

இத்தகைய அரச சேவை ஆணைக்குழு நிறுவப்பட்டதன் நோக்கங்கள்:

1. அரச சேவையைச் சுயாதீனப்படுத்துதல்.
2. அரச சேவைகள் தொடர்பில் சிறுபான்மையினரிடையே நம்பிக்கையை கட்டியெழுப்புதல்.

ஆனால், 1972 முதலாம் குடியரசு அரசியலமைப்பில் அரச சேவையை நிர்வகிக்கும் அதிகாரம் பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவைக்கு வழங்கப்பட்டது. இது தொடர்பாகப் பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை தேசிய அரசுப் பேரவைக்கு (National State Assembly) மாத்திரமே பொறுப்புக்கூறக் கடமைப்பட்டிருந்தது. அரச சேவையை நிர்வகிப்பதில் பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவைக்கு ஆலோசனை வழங்குவதற்காக இரண்டு விசேட நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன:

1. அரச சேவை ஆலோசனைச் சபை (Public Service Advisory Board)

2. அரச சேவை ஒழுக்காற்றுச் சபை (Public Service Disciplinary Board)

தலா மூன்று உறுப்பினர்களைக் கொண்ட இவ்விரு சபைகளும் பிரதமரின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதியால் 4 ஆண்டுகாலத்திற்கு நியமிக்கப்பட்டன. இவற்றிற்குத் தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினர்களையோ அல்லது அரச அதிகாரிகளையோ நியமிக்க முடியாது. இச்சபைகளின் பணி யாதெனில், பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவைக்கு அரச ஊழியர்களை நியமித்தல், இடமாற்றம் செய்தல், நீக்குதல் போன்ற விடயங்களில் ஆலோசனை வழங்குவதாகும். அந்த ஆலோசனைகளை ஏற்பதோ அல்லது நிராகரிப்பதோ அமைச்சரவையின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தது.

இதற்கமைய, சோல்பரி அரசியலமைப்பில் அரச சேவை பெரும்பாலும் சுயாதீனமாக இருந்ததுடன், முதலாம் குடியரசு அரசியலமைப்பில் அரச சேவை முழுமையாக அரசியல்மயமாக்கப்பட்ட ஒரு நிலையைப் பிரதிபலிக்கிறது.

7. 1978 இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டை ஆராய்க. (10 × 2 = 20 புள்ளிகள்)

(i) ஜனாதிபதியும் நீதித்துறையும்:

1978 இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில் நீதியை நிலைநாட்டுவதற்காக ஒரு நீதிமன்றக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அது 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதியை நிலைநாட்டும் சட்டத்தின் மூலமாகும்.

உயர் நீதிமன்றங்கள்: உயர் நீதிமன்றம் (Supreme Court), மேன்முறையீட்டு நீதிமன்றம் (Court of Appeal).

கீழ் நீதிமன்றங்கள்: மாகாண உயர் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், நீதவான் நீதிமன்றம், ஆரம்ப நீதிமன்றம்.

இந்நீதிமன்றக் கட்டமைப்பின் உள்வாரி நிர்வாக நடவடிக்கைகளில் ஜனாதிபதி நேரடியாகத் தலையிட முடியாது. எனினும், நீதிபதிகளை நியமித்தல், நீக்குதல், குற்றவாளிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்குதல் போன்ற சில அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளன.

அரசியலமைப்பின் 107(1) பிரிவு: உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. எனினும் இதனை மேற்கொள்வதற்கு முன்னதாக அரசியலமைப்பு பேரவையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். (17,19,21ஆம் திருத்தங்களின்படி)

107(4) பிரிவு: உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்க வேண்டும்.

109(1) பிரிவு: உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வுபெறுவதற்கு முன் அவர்களைப் பதவியிலிருந்து நீக்குவதற்காகப் பாராளுமன்றத்தில் குற்றப்பிரேரணை (Impeachment) நிறைவேற்றப்படும் போது, அவர்களை நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

உயர் நீதிமன்றங்களில் நீதிபதி பதவிகள் வெற்றிடமாகும் போது தற்காலிக அடிப்படையில் நீதிபதிகளை நியமித்தல்.

110(1) பிரிவு: உயர் நீதிமன்றங்களில் சேவையாற்றும் நீதிபதிகள் வேறு பணிகளில் ஈடுபடுவதாயின் ஜனாதிபதியின் எழுத்துமூல அனுமதி அவசியமாகும்.

110(3) பிரிவு: ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகள் வேறு தொழில்களில் ஈடுபடுவதாயின் ஜனாதிபதியின் எழுத்துமூல அனுமதி தேவை.

111(அ) பிரிவு: நீதிச் சேவை ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் மாகாண உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல்.

112 பிரிவு: நீதிச் சேவை ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் மாகாண உயர் நீதிமன்ற நீதிபதிகளைப் பதவியிலிருந்து நீக்குதல்.

34(1) பிரிவு: குற்றவாளிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்குதல் மற்றும் தண்டனையைக் குறைத்தல்.

129(1) பிரிவு: உயர் நீதிமன்றத்திடமிருந்து சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்.

போன்ற விடயங்களின் ஊடாக ஜனாதிபதிக்கும் நீதித்துறைக்கும் இடையிலான தொடர்பு உருவாக்கப்படுகிறது.

(ii) அடிப்படை உரிமைகள் (Fundamental Rights):

அடிப்படை உரிமைகள் என்பன அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகளாகும். அடிப்படை உரிமைகள் தொடர்பான இந்நாட்டின் முதலாவது அனுபவம் 1972 அரசியலமைப்பாகும். இதற்கு முன்னர் காணப்பட்ட 1947 அரசியலமைப்பில் சிறுபான்மையினரின் உரிமைகள் மாத்திரமே (பிரிவு 29) குறிப்பிடப்பட்டிருந்தன. ஆனால் 1978 இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில், முதலாம் குடியரசு அரசியலமைப்பை விடவும் பரந்தளவில் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அடிப்படை உரிமைகளை மக்கள் இறைமை தத்துவத்திற்குள் உள்வாங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் 3 ஆம் அத்தியாயத்தில் 10 முதல் 14 வரையான பிரிவுகளில் இவ்வுரிமைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ்வுரிமைகள் அனைத்து நபர்களுக்கும் கிடைத்த போதிலும், 12(2) மற்றும் 13, 14 ஆம் பிரிவுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சில உரிமைகள் பிரஜைகளுக்கு மாத்திரமே உரியதாகும். 10 மற்றும் 11 ஆம் பிரிவுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகள் (சிந்தனைச் சுதந்திரம், சித்திரவதைக்கு உள்ளாகாதிருக்கும் உரிமை) Absolute Rights எனப்படும் அத்தியாவசிய உரிமைகளாகும்.

இதற்கமைய 1978 அரசியலமைப்பின் மூலம் முதலாம் குடியரசு அரசியலமைப்பை விட பரந்தளவில் உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், 1972 அரசியலமைப்பில் உரிமைகளுக்கு விதிக்கப்பட்டிருந்த பல கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், தனிநபர்கள் தமது உரிமைகளை அனுபவிக்கும் போது தேசிய பாதுகாப்பு, தேசிய பொருளாதாரம், பொதுச் சுகாதாரம், பொது ஒழுங்கு மற்றும் ஒழுக்கநெறிகளைப் பாதுகாத்தல், இன மற்றும் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் போன்ற விதிகளுக்கு உட்பட்டு, ஏனையோரின் உரிமைகளும் பாதுகாக்கப்படும் வகையிலேயே அனுபவிக்க வேண்டும்.

எவ்வாறாயினும், விழிம்புநிலை மக்களின் (பெண்கள், சிறுவர்கள், முதியவர், விசேட தேவை உடையவர்கள்) உரிமைகள் தொடர்பான பாராளுமன்றம் சட்டங்களை இயற்றுவதற்கு யாப்பில் ஏற்பாடுகள் காணப்படுகின்றமை.

1972 அரசியலமைப்பில் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான முறையான பொறிமுறை ஒன்று இருக்கவில்லை. ஆனால் 1978 அரசியலமைப்பின் மூலம் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டப் பொறிமுறை நிறுவப்பட்டுள்ளது:

உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளமை.

ஓம்புட்ஸ்மேன் (Ombudsman) எனப்படும் பாராளுமன்ற நிர்வாக ஆணையாளர் பதவி நிறுவப்பட்டமை.

இது அரசியலமைப்பு ரீதியான பொறிமுறையாக இருக்கும் அதேவேளை, உரிமை மீறல்கள் சம்பந்தமாகக் கையாள்வதற்காகப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் கீழ் (1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டம்)

- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் நிறுவப்பட்டு அது வலுப்படுத்தப்பட்டுள்ளமை
- 19ஆம் திருத்தத்தின் கீழ் தகவல் அறியும் உரிமை சேர்க்கப்பட்டுள்ளமை.
- தகவல் அறியும் ஆணைக்குழு தாபிக்கப்பட்டுள்ளமை.

- அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தினை நீக்குவதற்கு விசேட ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டியுள்ளமை.

விமர்சனம்

- பயங்கரவாத தடைச்சட்டம், அவசகால சட்டம் போன்றன சட்டங்கள் தொடர்ச்சியாக நடைமுறையில் காணப்படுகின்றமையால் பிரசைகள் உரிய முறையில் அடிப்படை உரிமைகளை அனுபவிக்க முடியாதுள்ளது.
- உயிர்வாழ்வதற்கான உரிமைகள் நேரடியாக யாப்பில் சேர்க்கப்படாமை ஒரு குறைபாடாக உள்ளது.
- மனித உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பாக ஒம்புட்ஸ்மேன் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மிகவும் குறைவாக காணப்படுகின்றமை.
- உரிமைகள் மீறப்படும்போது அதற்கான நிவாரணம் பெறும் காலம் வரையறுக்கப்பட்டுள்ளமை (30 நாட்கள் என்பது)
- அடிப்படை உரிமைகள் வழக்கொன்றை தாக்கல் செய்வதற்கான பொறிமுறையில் உள்ள குறைபாடுகள் (பாதிக்கப்பட்ட நபர் அல்லது இரத்த உறவினர் மட்டுமே தாக்கல் செய்யலாம்)
- அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்றுக்காக செலவிடப்படும் தொகை ஏனைய வழக்குகளுடன் ஒப்பிடுகையில் அதிபமாக உள்ளமை.
- உச்ச நீதிமன்றத்தை அணுகுவதில் சாதாரண மக்களுக்குள்ள சவால்கள் (கொழும்பில் மட்டும் காணப்படல்)

(iii) **பாராளுமன்றம்:**

தற்போதைய அரசாங்க முறையின் கீழ் நிறுவப்பட்டுள்ள சட்டத்துறை 'பாராளுமன்றம்' என அழைக்கப்படுவதுடன், அது 225 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இவர்களுள் 196 பேர் நேரடியாகப் பொதுத்தேர்தல் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதுடன், 29 பேர் தேசியப் பட்டியல் (National List) மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 19 ஆம் திருத்தத்திற்குப் பின்னர் இதன் பதவிக் காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

பொதுத்தேர்தலின் பின்னர் நடத்தப்படும் முதலாவது பாராளுமன்ற அமர்வில் முதலில் சபாநாயகர், பிரதிச் சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர் ஆகிய பதவிகளுக்காக மூன்று மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவர். சபாநாயகர் பாராளுமன்ற அமர்வுகளுக்குத் தலைமை தாங்குவதுடன், பாராளுமன்றத்தின் கூட்டுநடப்பெண் 20 ஆகும்.

பாராளுமன்றத்தைக் கூட்டுதல், கூட்டத்தொடரை ஒத்திவைத்தல் மற்றும் கலைத்தல் ஆகியவற்றை ஜனாதிபதியே செய்ய வேண்டும் என்பதுடன், வருடத்திற்கு ஒரு முறையாவது ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டும். ஜனாதிபதி பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்திவைக்கும் பிரகடனத்திலேயே அடுத்த கூட்டத்தொடர் கூடும் திகதியையும் குறிப்பிட வேண்டும். அத்திகதி பிரகடனப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து இரண்டு மாதங்களை மிஞ்சாத ஒன்றாக இருக்க வேண்டும். பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு சட்டமூலமும் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும். அங்கு சபாநாயகர் தனது வாக்கை அளிப்பதில்லை. எனினும் வாக்குகள் சமநிலையாகும் போது தீர்மானிக்கும் வாக்கை (Casting Vote) பயன்படுத்தும் அதிகாரம் சபாநாயகருக்கு உண்டு.

பாராளுமன்றத்தின் அதிகாரங்கள்:

காலம் கடந்த சட்டவாக்க அதிகாரங்கள்

நிறைவேற்றுத்துறையைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்கள்

பொது நிதி மீதான கட்டுப்பாட்டு அதிகாரங்கள்

அரசியலமைப்பைத் திருத்துவதற்கான அதிகாரம்

சட்டவாக்க அதிகாரங்களின் கீழ் பாராளுமன்றத்திற்குச் சட்டங்களை இயற்றும் அதிகாரம் உண்டு. சாதாரண சட்டமூலங்கள் மற்றும் நிதிச் சட்டமூலங்களை நிறைவேற்றும் அதிகாரம் இருப்பதுடன், அவை உரிய பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்ட பின்னர் சபாநாயகர் அதில் கையொப்பமிட்டதும் அச்சட்டமூலங்கள் சட்டமாக மாறும்.

பாராளுமன்றத்தின் உயரிய நிலை (Supremacy) பற்றி ஆராயும் போது, முதலாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் காணப்பட்ட தேசிய அரசுப் பேரவையைப் போல, இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்றம் ஒரு முழுமையான உயரிய நிறுவனமல்ல என்பது தெளிவாகிறது. இந்த அரசாங்க முறையின் கீழ் சட்டவாக்க அதிகாரத்தைச் செயற்படுத்தும் இரண்டு நிறுவனங்களை அரசியலமைப்பு அறிமுகப்படுத்தியுள்ளது:

1. பாராளுமன்றம்
2. பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பின் போது பொதுமக்கள்

இதற்கமைய, சட்டங்களை இயற்றும் ஒரேயொரு உயரிய நிறுவனம் பாராளுமன்றம் அல்ல.

பாராளுமன்றத்தின் அதிகாரத்திற்கான கட்டுப்பாடுகள் பின்வருமாறு:

சட்டவாக்கத்திற்குச் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பைப் (Referendum) பயன்படுத்துதல்.

அரசியலமைப்பின் சில பிரிவுகளின் மூலம் பாராளுமன்றத்தின் அதிகாரம் வரையறுக்கப்பட்டிருத்தல்.

பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் மீது ஜனாதிபதிக்குக் காணப்படும் விசேட அதிகாரங்கள்.

போன்ற விதிகளின் மூலம் பாராளுமன்றத்தின் அதிகாரம் வரையறுக்கப்பட்டுள்ளது. எனினும், பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் சட்டங்களின் அரசியலமைப்பு முரணற்ற தன்மையைப் (Judicial Review) பரிசீலிக்கும் அதிகாரம் சட்டம் இயற்றப்பட்ட பின்னர் உயர் நீதிமன்றத்திற்கு இல்லை (நீதி முன் புனராய்வு மாத்திரமே உண்டு (Pre-enactment review)). ஆனால் அதுமட்டும் பாராளுமன்றத்தின் அதிகாரத்தை உயரியது எனக் கூறப் போதுமானதல்ல.

75ஆம் உறுப்புரையின் கீழ் கடந்தகாலத்தையும் உள்ளடக்கும் சட்டங்களை ஆக்கும் வல்லமை பாராளுமன்றுக்கு வழங்கப்பட்டுள்ளமை. (உதாரணம் : 19ஆம் திருத்தத்திற்கு முன்னரான ஜனாதிபதியின் பதவிக்காலம், பாராளுமன்றத்தின் ஆயுட்காலம்)

19ஆம் திருத்தத்தின் மூலம் பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் சற்று அதிகரிக்கப்பட்டு ஜனாதிபதியின் அதிகாரங்கள் சில வரையறுக்கப்பட்டமை. எனினும் 20ஆம் திருத்தத்தின்படி ஜனாதிபதியின் அதிகாரங்கள் மீள நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

(iv) 19 ஆம் அரசியலமைப்புத் திருத்தம்

- 2015 இல் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கத்தினால் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதும் பிரதமரின் அதிகாரங்களை அதிகரிப்பதும்

பிரதான நோக்கமாகக் கொண்டு 19 ஆம் திருத்தம் முன்வைக்கப்பட்டது. அதில் குறிப்பிடப்பட்ட முக்கிய திருத்தங்கள் பின்வருமாறு:

- ஜனாதிபதியின் பதவிக் காலம் 6 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது.
- ஒரு நபர் ஜனாதிபதி பதவியை வகிக்கக்கூடிய தடவைகளின் எண்ணிக்கை 2 ஆகக் குறைக்கப்பட்டது.
- அரச சேவை மற்றும் நீதித்துறையின் உயர் பதவிகளுக்கு ஜனாதிபதி தன்னிச்சையாக நபர்களை நியமிப்பதைத் தடுப்பதற்காக, 17 ஆம் திருத்தத்தின் மூலம் நிறுவப்பட்டு 18 ஆம் திருத்தத்தின் மூலம் ஒழிக்கப்பட்ட 'அரசியலமைப்புப் பேரவை' (Constitutional Council) மீண்டும் நிறுவப்பட்டது.
- ஜனாதிபதி அமைச்சரவையை நியமிக்கும் போது பிரதமரின் ஆலோசனையைப் பெற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டது.
- பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான கால எல்லை 1 ஆண்டிலிருந்து 4 1/2 ஆண்டுகள் வரை நீடிக்கப்பட்டது (அதற்கு முன் கலைக்க பாராளுமன்றத்தின் 2/3 பெரும்பான்மை தீர்மானம் தேவை).
- ஜனாதிபதிக்கு பிரதமரை நியமிக்க அதிகாரம் உண்டு எனினும், அவரை தன்னிச்சையாகப் பதவியிலிருந்து நீக்கும் அதிகாரம் நீக்கப்பட்டது.
- ஜனாதிபதியின் செயற்பாடுகள் குறித்து பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பும் உரிமை பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டது.
- ஜனாதிபதியின் நீதித்துறை விலக்குரிமை (Immunity) கட்டுப்படுத்தப்பட்டு, அவரது அடிப்படை உரிமை மீறல்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர இடமளிக்கப்பட்டது.
- பாராளுமன்றத்தின் பதவிக் காலம் 6 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது.
- ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கான குறைந்தபட்ச வயது எல்லை 30 இலிருந்து 35 ஆக உயர்த்தப்பட்டது.
- சுயாதீன ஆணைக்குழுக்கள் (சுயாதீன தேர்தல் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு போன்றவை) நிறுவப்பட்டதுடன், அவற்றிற்கான உறுப்பினர்களைப் பரிந்துரைக்கும் அதிகாரம் அரசியலமைப்புப் பேரவைக்கு வழங்கப்பட்டது.
- அமைச்சரவையின் அதிகபட்ச எண்ணிக்கை 30 ஆகவும், பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை 40 ஆகவும் வரையறுக்கப்பட்டது. (தேசிய அரசாங்கமொன்று அமைக்கப்படும் சந்தர்ப்பத்தில் அமைச்சர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டது).
- இத்திருத்தங்களின் ஊடாகப் பிரதானமாக நிறைவேற்று ஜனாதிபதியின் தன்னிச்சையான அதிகாரங்கள் பெருமளவில் குறைக்கப்பட்டன எனக் கூற வேண்டும்.
- பாராளுமன்றம் நிராகரித்த சட்டமூலம் ஒன்றை மக்கள் தீர்ப்புக்கு விட முடியாது.
- பதவியிலிருந்த அப்போதைய ஜனாதிபதிக்கு மட்டும் பாதுகாப்பு, சுற்றாடல் மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சுகளை வைத்திருக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டதோடு அதற்குப் பின்னர் ஜனாதிபதிகள் எவ்வித அமைச்சுக்களையும் தன்வசம் வைத்திருத்தல் தடுக்கப்பட்டது. எனினும், இந்நிலை 20ஆம் திருத்தத்தில் மாற்றியமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
- தகவல் அறியும் உரிமைகள் அடிப்படை உரிமைகளில் ஒன்றாக ஏற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியமை.
- அத்திருத்தத்தோடு இலங்கையின் அரசியல் முறைமை கோலிஸ் முறைக்கு ஒத்ததாக மாற்ற மடைந்ததோடு இது குறுகிய காலமே நடைமுறையிலிருந்தது

8. (i) பிரான்ஸின் ஐந்தாவது குடியரசு அரசாங்க முறையில் காணப்படும் ஐந்து பண்புகளைக் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

1. ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளடங்கிய அமைச்சர் சபையைக் கொண்ட இரட்டை நிறைவேற்றுத்துறை (Dual Executive) காணப்படல்.
2. முழு அதிகாரமிக்க நிறைவேற்று ஜனாதிபதி பதவியை உருவாக்கி, பாராளுமன்றத்தை இரண்டாம் நிலைக்குத் தள்ளியமை.
3. இரு அவைகளைக் கொண்ட (Bicameral) பாராளுமன்றம் காணப்படல்.
4. உயர் மட்ட நீதி மன்றக் கவுன்சிலைக் கொண்ட உயரிய நீதித்துறை கட்டமைப்பு காணப்படல்.
5. நிர்வாக அதிகாரம் பரவலாக்கப்பட்டிருத்தல்.
6. அபிப்பிராய வாக்கெடுப்பு (Referendum) முறைமை காணப்படல்.
7. எழுதப்பட்ட மற்றும் நெகிழ்ச்சியற்ற (Rigid) அரசியலமைப்பு காணப்படல்.

(ii) இந்திய அரசாங்க முறையில் காணப்படும் ஒற்றையாட்சிப் பண்புகளை விளக்குக. (15 புள்ளிகள்)

- 1950 ஜனவரி 26 இல் நடைமுறைக்கு வந்த இந்திய அரசியலமைப்பை அரசியல் விமர்சகர்கள் ஓர் ‘அர்த்தச் சமஷ்டி’ (Quasi-federal) அரசாங்க முறை என அழைக்கின்றனர். அது சமஷ்டிப் பண்புகளையும் ஒற்றையாட்சிப் பண்புகளையும் ஒருங்கே கொண்ட ஓர் அரசாங்க முறையாகும். அதில் காணப்படும் ஒற்றையாட்சிப் பண்புகளைப் பின்வருமாறு காட்டலாம்:
- **பலம்வாய்ந்த மத்திய அரசாங்கம் காணப்படல்:** அதிகாரப் பகிர்வின் போது
  மத்திய அரசிற்கு 97 விடயங்களும்,
  மாநில அரசுகளுக்கு 66 விடயங்களும்,
  பொதுப் பட்டியலில் (Concurrent List) 47 விடயங்களும் வழங்கப்பட்டுள்ளன.
- நிதி, வெளியுறவு, பாதுகாப்பு, மாநிலங்களுக்கு இடையிலான வர்த்தகம், வங்கி மற்றும் காப்புறுதி போன்ற முக்கிய அதிகாரங்கள் மத்திய அரசிடமே காணப்படுகின்றன. அரசியலமைப்பின் மூலமே மாநிலங்களை விட அதிக அதிகாரங்கள் மத்திய அரசிற்கு வழங்கப்பட்டுள்ளன.
- **அவசரகால அதிகாரங்கள்:** அவசரகால நிலைமைகளின் போது இந்தியாவின் மத்திய அரசாங்கத்திற்கு மாநிலங்களின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் அல்லது தற்காலிகமாகப் பொறுப்பேற்கும் அதிகாரம் உண்டு:
  தேசிய அவசரகால நிலைமை (பிரிவு 352)
  மாநில அவசரகால நிலைமை / ஜனாதிபதி ஆட்சி (பிரிவு 356)
  நிதி அவசரகால நிலைமை (பிரிவு 360)
- **ஒற்றைக் குடியுரிமை:** சமஷ்டி நாடுகளில் இரட்டைக் குடியுரிமை காணப்பட்ட போதிலும், இந்தியாவில் ஒற்றைக் குடியுரிமையே (Single Citizenship) வழங்கப்பட்டுள்ளது.
- மத்திய சட்டத்துறையான பாராளுமன்றத்தில் மாநிலங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ராஜ்ய சபாவை (மாநிலங்கள் அவை) விட, மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட லோக் சபாவின் (மக்களவை) அதிகாரம் மிக உயர் மட்டத்தில் காணப்படல். (உதாரணம்: நிதிச் சட்டமூலங்களை நிராகரிக்க ராஜ்ய சபாவிற்கு அதிகாரம் இல்லை).

- புதிய மாநிலங்களை உருவாக்குவதற்கும், நிலவும் மாநிலங்களின் எல்லைகள் மற்றும் பெயர்களை மாற்றுவதற்கும் மத்திய பாராளுமன்றத்திற்கு முழு அதிகாரம் காணப்படல்.
- மாநிலச் சட்டமன்றங்கள் நிறைவேற்றும் சில சட்டமூலங்களைக் குடியரசுத் தலைவர் (மத்திய அரசு) தடுத்து நிறுத்தவோ அல்லது இரத்து செய்யவோ (Veto) அதிகாரம் கொண்டிருத்தல்.

இதற்கமைய, யுத்த காலங்களிலும் நெருக்கடி நிலைமைகளின் போதும் இந்தியா ஓர் ஒற்றையாட்சி நாட்டைப் போலவே செயற்படுகிறது. நெருக்கடி நிலைமைகளின் போது மத்திய அரசு மாநிலங்களின் அதிகாரங்களைத் தன்வசப்படுத்தி மேலும் பலமடைய முடியும் என்பதை விளக்க வேண்டும்.

9. **ஜனநாயக ஆளுகை சம்பந்தமாக இலங்கையிலுள்ள அனுபவங்களை விவரிக்கவும்.**

(20 புள்ளிகள்)

- உலகினில் பல்வேறு ஆட்சி மாதிரிகள் காணப்படுகின்றன. முடியாட்சி மாதிரி, பிரபுத்துவ ஆட்சி மாதிரி, பாசிச மாதிரி, இராணுவ ஆட்சி மாதிரி மற்றும் ஜனநாயக ஆட்சி முறை என்பன அவற்றுள் சிலவாகும். இவற்றுள் உலகளவில் மிகவும் பிரபலமான ஆட்சி முறை ஜனநாயக ஆட்சி முறையாகும்.
- நீண்டகாலம் முடியாட்சி முறையைக் கொண்டிருந்த இலங்கை, காலனித்துவ ஆட்சிக் காலத்திலேயே ஜனநாயகப் பாதைக்குள் காலடி எடுத்து வைத்தது.
- கோல்புறூக் அரசியலமைப்பின் மூலம் தாராளவாதப் பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டமை, வர்த்தகப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டமை, அரசின் வர்த்தக ஏகபோகம் ஒழிக்கப்பட்டமை, சுதந்திர உழைப்புச் சந்தை உருவாக்கப்பட்டமை, ஒற்றைச் சட்டக் கட்டமைப்பு உறுதிப்படுத்தப்பட்டமை மற்றும் முக்கியமாக சட்டநிரூபண சபை மற்றும் நிறைவேற்றுச் சபை என்பன உருவாக்கப்பட்டன. இதன் மூலம் ஜனநாயக ஆளுகைக்கான அடிப்படை மாதிரி இலங்கைக்குள் உருவானது.
- 1910 குறு - மக்கலம் அரசியலமைப்பின் மூலம் வரையறுக்கப்பட்ட வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் சட்டநிரூபண சபைக்கு (சட்டவாக்கக் கழகம்) நான்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இது போதுமானதாக இல்லாவிட்டாலும், ஜனநாயக ஆளுகைக்கான பாதையைத் திறந்துவிட்டது.
- 1920 மெனிங் அரசியலமைப்பு மற்றும் 1924 மெனிங் - டொவொன்ஷயர் அரசியலமைப்புகள் மூலம் இப் பிரதிநிதித்துவங்கள் மேலும் அதிகரிக்கப்பட்டன.
- இலங்கையின் ஜனநாயக ஆளுகை வரலாற்றில் மிக முக்கியமான கட்டம் 1931 டொனமூர் அரசியலமைப்புடன் ஆரம்பமாகிறது. சர்வஜன வாக்குரிமை அறிமுகம், அரசுக் கழகம் நிறுவல், நிறைவேற்றுக்குழு முறை, அமைச்சர் சபை உருவாக்கம் மற்றும் இனவாரிப் பிரதிநிதித்துவ ஒழிப்பு என்பன இதன் முக்கிய அம்சங்களாகும்.
- 1947 சோல்பரி அரசியலமைப்பானது இலங்கையின் ஜனநாயக ஆளுகையின் உச்சக்கட்டமாகும். இரு அவைகளைக் கொண்ட சட்டத்துறை, சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்படல், சுயாதீன நீதித்துறை, சுயாதீன அரச சேவை, அதிகாரப் பகிர்வுக் கோட்பாடு மற்றும் வரையறுக்கப்பட்ட அரசாங்கக் கொள்கை என்பன இதன் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டன.
- எனினும், 1950, 1960 மற்றும் 1970 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இன முரண்பாடுகள், ஹர்த்தால்கள் மற்றும் 1971 இன் இளைஞர் ஆயுதக் கிளர்ச்சி என்பன இலங்கையின் ஜனநாயகத் தன்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தின.

- 1972 முதலாம் குடியரசு அரசியலமைப்பும் ஜனநாயக ஆளுகையைப் பலவீனப்படுத்தியது. அது ஒட்டுமொத்த அரச அதிகாரத்தையும் 'தேசிய அரசுப் பேரவை' என்ற ஓரவை சட்டத்துறையிடம் குவித்தது.
- 1978 இரண்டாம் குடியரசு அரசியலமைப்பானது ஜனநாயகத்தை மேலும் பலவீனப்படுத்தியதாக விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியிடம் அரசியலமைப்பு ரீதியான வரம்பற்ற அதிகாரங்கள் குவிக்கப்பட்டன. இது ஜனநாயகத்தைப் பின்னோக்கி நகர்த்தும் செயல் எனப் பல விமர்சகர்கள் சுட்டிக்காட்டினர். (உதாரணம்: 'ஜனநாயகத்தின் பிறழ்வு' - நீல் டி வோட்டா, 'ஜனநாயகத்தின் பின்னடைவு' - மிக் மூர்).
- எவ்வாறாயினும், தொடர்ச்சியாகத் தேர்தல்கள் நடத்தப்படுகின்றமை, தேர்தல்களில் மக்களின் பங்களிப்பு உயர் மட்டத்தில் காணப்படுகின்றமை, சுயாதீன நீதிமன்றக் கட்டமைப்பு மற்றும் அடிப்படை உரிமைகள் அத்தியாயம் காணப்படுகின்றமை என்பன இந்நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் காரணிகளாகும்.
- மறுபுறம், ஜனாதிபதியிடம் அதிக அதிகாரம் காணப்படல், சட்டத்துறையும் நீதித்துறையும் ஜனாதிபதியின் செல்வாக்கிற்கு உள்ளாதல், அரசியல் வன்முறைகள், ஊழல் மற்றும் விரயம் உயர் மட்டத்தில் காணப்படல், அவசரகாலச் சட்டங்கள் அடிக்கடி அமுல்படுத்தப்படல் போன்ற விடயங்கள் ஜனநாயகத்திற்குப் பெரும் சவால்களாகும்.
- இலங்கைக்குத் தேவையானது ஒரு முறையான ஜனநாயக ஆளுகையே ஆகும். கிட்டத்தட்ட நூறு வருடங்களாக வளர்ந்து வந்த பலமான ஜனநாயகப் பாரம்பரியங்கள் காணப்படல், இலங்கை ஒரு பல்லின, பல்சமய, பல்கலாசார சமூகமாக இருத்தல், மக்களின் அரசியல் விழிப்புணர்வு மற்றும் பங்களிப்பு உயர் மட்டத்தில் இருத்தல் போன்ற காரணங்களால் இலங்கைக்கு ஜனநாயக ஆளுகையே பொருத்தமானதாகும்.
- சுருங்கக்கூறின், இலங்கையின் ஜனநாயக ஆளுகை தொடர்பான அனுபவமானது வெற்றிகள், பின்னடைவுகள் மற்றும் சவால்கள் நிறைந்த ஒரு கலவையான அனுபவமாகும் எனக் கூற வேண்டும்.

10. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டைப் பற்றிச் சுருக்கக் குறிப்பு எழுதுக.
(10 × 2 = 20 புள்ளிகள்)

(i) தேசிய அதிகாரமும் தேசிய அபிலாஷையும் (National Power and National Interest**)**

நவீன உலகில் தேசிய அரசு முறையே காணப்படுகிறது. 'ஒரு தேசம் ஓர் அரசு' என்ற கொள்கையின் அடிப்படையில் தேசிய அரசு முறை தோற்றம் பெற்றுள்ளது. நவீன உலகில் எந்தவொரு தேசிய அரசும் தனித்து வாழ முடியாது. இதனால் ஒவ்வொரு அரசும் சர்வதேச சமூகத்துடன் தொடர்புகொள்ள வேண்டியுள்ளது. சர்வதேச அரசியலில் ஈடுபடும் போது ஒவ்வொரு அரசிற்கும் 'தேசிய அதிகாரம்' என்ற காரணி மிக முக்கியமானதாகும். தேசிய அதிகாரம் என்பது ஓர் அரசு மற்றுமோர் அரசின் சிந்தனையையும் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்தும் ஆற்றலாகும். இது குறித்து அரசியல் விமர்சகரான ஹான்ஸ் ஜே. மோர்கன்தோ (Hans J. Morgenthau) பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

'ஒரு குறிப்பிட்ட அரசு தனது விருப்பத்தை மற்றுமோர் அரசு மீது திணித்து, தனக்குத் தேவையானவாறு அந்த அரசை இயக்கும் ஆற்றலையும், அதற்கு அது பணியாத போது அழுத்தங்கள் மூலம் பணிய வைக்கும் ஆற்றலையும் தேசிய அதிகாரம் எனப்படும்.' - ஹான்ஸ் ஜே. மோர்கன்தாவ்

தற்காலத்தில் எந்தவொரு அரசும் சுயதேவைப் பூர்த்தியைக் கொண்டிருக்கவில்லை. எனவே, தமது நாட்டின் தேசிய அபிலாஷைகளை (தேசிய நலன்களை) நிறைவேற்றிக் கொள்வதற்காக ஒவ்வொரு அரசும் சர்வதேச அரசியலில் ஈடுபட வேண்டியுள்ளது. சர்வதேசத் தொடர்புகளைப் பேணுவது இன்றியமையாததாகும்.

நாடுகள் தமது அரசியல் நடத்தையின் போது நீண்டகால அடிப்படையில் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும், செழுமைக்காகவும் கொண்டுள்ள விருப்பங்களும் தேவைகளும் தேசிய அபிலாஷைகளாகும். இத்தேசிய அபிலாஷைகள் அரசியல், பொருளாதார, சமூக அல்லது கலாசார அபிலாஷைகளாக இருக்கலாம்.

சர்வதேச அரசியலில் பயன்படுத்தப்படும் தேசிய அதிகாரம் மற்றும் தேசிய அபிலாஷை ஆகிய கருத்துக்களுக்கு இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. தேசிய அபிலாஷை என்பது தேசிய அதிகாரத்தின் வெளிப்பாடாகும்.

ஓர் அரசின் தேசிய அதிகாரம் பல காரணிகளின் சேர்க்கையால் உருவாகிறது:

- **இயற்கைக் காரணிகள்:** நாட்டின் புவியியல் அமைவிடம், மக்கள் தொகை, இயற்கை வளங்கள்.
- **அரசியல் காரணிகள்:** அரசாங்கத்தின் தன்மை, அதிகாரத்துவ முறை.
- **சமூக மற்றும் கருத்தியல் காரணிகள்:** தேசிய கொள்கைகள், தேசிய தனித்துவம்.
- **விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் காரணிகள்:** தொழிற்துறை ஆற்றல், இராணுவ பலம்.
- **வெளிவாரி மற்றும் ஏனைய காரணிகள்:** நாட்டின் கீர்த்தி, உளவுச் சேவை (மறைமுகத் தகவல் சேவை).

தேசிய அதிகாரத்தைச் செயற்படுத்தப் பல்வேறு உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன:

- செல்வாக்குச் செலுத்தல் (அழுத்தம் கொடுத்தல்)
- நன்மைகள் / உதவிகள் வழங்குதல்
- தண்டனை விதித்தல்
- பலப் பிரயோகித்தல் (இராணுவ பலம்)

ஒவ்வொரு நாட்டிற்கும் பல தேசிய அபிலாஷைகள் உண்டு:

- தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
- தேசிய பொருளாதாரத்தை உயர்த்துதல்
- தேசிய நலன்புரியை வளர்த்தல்
- தேசிய அரசியல் கொள்கையைப் பாதுகாத்தல்
- தேசிய கௌரவத்தைப் பாதுகாத்தல்

ஓர் அரசு தனது தேசிய அபிலாஷைகளை அடையப் பின்வரும் உத்திகளைக் கையாள்கிறது:

- இராஜதந்திர உறவுகள் (தூதுவராலயச் சேவை)
- பிரசாரம் (Propaganda)
- பொருளாதார உத்திகள் (கடன்கள், மானியங்கள், உதவிகள்)
- கூட்டணிகளை ஏற்படுத்துதல் (ஒப்பந்தங்கள்)
- யுத்தம் (போர்)

மேற்குறிப்பிட்ட தகவல்களுக்கு ஏற்ப சர்வதேச அரசியலில் தேசிய அதிகாரம் மற்றும் தேசிய அபிலாஷை என்ற விடயங்கள் மிகவும் முக்கியமானது என்பது தெளிவாகின்றது.

(ii) பொதுக் கொள்கையும் நீதித்துறையும் (Public Policy and Judiciary)

- பொதுக்கொள்கை உருவாக்கச் செயற்பாட்டில் (Public Policy Process) பொதுவாக அடிக்கடி அவதானிக்கப்படாத, ஆனால் அது தொடர்பில் மிக முக்கியமான ஒரு நிறுவனமாக நீதித்துறையைக் குறிப்பிடலாம்.
- கொள்கைகள் தொடர்பான சட்டப் பிரச்சினைகள் எழும் போது அவற்றை வியாக்கியானம் செய்வதும் (அர்த்தப்படுத்துவது), அவற்றின் அரசியலமைப்பு முரணற்ற தன்மையைப் பரிசீலிப்பதும் நீதித்துறை ஆகும்.
- எனவே, அரச கொள்கைச் செயற்பாட்டில் நீதித்துறைக்கும் கொள்கை வழிகாட்டல் மற்றும் கொள்கை உருவாக்கத் தீர்மானங்களை மேற்கொள்வதில் கணிசமான அதிகாரமும் செல்வாக்கும் உண்டு.
- ஏதேனும் ஒரு சட்டம் நாட்டின் அடிப்படை அரசியலமைப்பிற்கு முரணானது என நீதிமன்றம் தீர்ப்பளித்தால், அக்கொள்கை அத்தோடு முடிவுக்கு வரும்.
- இவ்வதிகாரம் நீதிமன்றத்திற்குப் ‘நீதிப் புனராய்வு அதிகாரம்’ (Judicial Review) காணப்பட்டால் மாத்திரமே சாத்தியமாகும். மேலும் சில நாடுகளில், சட்டமூலங்கள் விவாதத்திற்கு உட்படுத்தப்படும் போதே கொள்கையின் வடிவத்தை வடிவமைப்பதில் நீதிமன்றத்திற்கு ஆலோசனை வழங்கும் அதிகாரமும் (Advisory Power) உண்டு. (உதாரணங்களுடன் விவரிக்க வேண்டும் - கொள்கைகளை இடைநிறுத்தி வைத்தல்).

(iii) **இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் சமகாலப் போக்குகள் (**Contemporary Trends in Sri Lanka's Foreign Policy)

வெளியுறவுக் கொள்கை என்பது ஓர் அரசு எந்தெந்த நாடுகளுடன் உறவுகளைப் பேணப்போகிறது, அதன் மூலம் என்ன நோக்கங்களை அடைய முற்படுகிறது, அதற்காக என்ன உத்திகளைக் கையாள்கிறது என்பதாகும்.

- இலங்கையின் வெளியுறவுக் கொள்கையானது அவ்வப்போது ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களுக்கு ஏற்ப மாற்றமடைந்துள்ளது.
- 2015 - 2020 காலப்பகுதியில் காணப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கைப் போக்குகள்:

  மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியமை. (உதாரணம்: பிரித்தானியா, ஜெர்மனி, பெல்ஜியம், பிரான்ஸ், இத்தாலி).

  IMF, உலக வங்கி (WB), ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB), உலக வர்த்தக அமைப்பு (WTO) போன்ற சர்வதேச நிதி நிறுவனங்களுடன் நெருங்கிச் செயற்பட்டுக் கடன் உதவிகளைப் பெற்றமை.

  இந்தியாவுடன் நெருங்கிய உறவுகளைப் பேணியமை.

  2015 இன் ஆரம்பக் கட்டத்தில் சீனாவுடனான தொடர்புகள் குறைந்திருந்த போதிலும், 2018 அளவாகச் சீனாவுடனான தொடர்புகள் மீண்டும் வளர்ச்சியடைந்தன.

  உதாரணம்: 1. போர்ட் சிட்டி / துறைமுக நகரத் திட்டத்தை மீண்டும் சீனாவிடம் ஒப்படைத்தமை,

  2. ஹம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சீனாவுக்குக் குத்தகைக்கு வழங்கியமை).

- **2020 - 2024 காலப்பகுதியில் காணப்பட்ட இலங்கை பொதுஜன பெரமுன அரசாங்கம்:**

2020 - 2022 காலப்பகுதியில் மேற்கத்திய நாடுகளுடன் இலங்கையின் தொடர்புகள் பெருமளவில் குறைந்திருந்தமை.

இந்திய - இலங்கை மற்றும் சீனா - இலங்கை உறவுகள் ஒரு குறிப்பிட்ட மட்டத்தில் காணப்பட்டமை. (உதாரணம்: சீன நிறுவனமொன்றிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆர்கானிக் உரக் கப்பலை ஏற்க மறுத்தமையால், சீனா இலங்கையின் மக்கள் வங்கியை கறுப்புப் பட்டியலில் சேர்த்தமை).

கோவிட்-19 (COVID-19) பெருந்தொற்றுக் காலத்தில் சீனா, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இலங்கைக்குத் தடுப்பூசிகளை வழங்கியமை.

- **2022 இல் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியானதன் பின்னர்:** மீண்டும் மேற்கத்திய நாடுகளுடனான தொடர்புகள் அதிகரித்தன. (IMF, உலக வங்கி போன்ற சர்வதேச நிதி நிறுவனங்களுடன் தொடர்புகள் பலமடைந்தன).
- 2022 இல் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக இந்தியா பாரிய நிதித் தேவைகளையும் உதவிகளையும் வழங்கியமை.
- **2024 இல் தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கமும்:** IMF உடன் நிதித் தொடர்புகளைப் பேணி வெளியுறவுக் கொள்கையை முன்னெடுத்து வருகின்றமை. தற்காலத்திலும் இந்தியாவுடன் நெருங்கிய வெளியுறவுத் தொடர்புகள் பேணப்படுவதைக் காண முடிகிறது.

  உதாரணம்: 2025 இல் இந்தியப் பிரதமர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டமை மற்றும் பல உடன்படிக்கைகள் கையெழுத்திடப்பட்டமை, 2026 இல் இலங்கை ஜனாதிபதி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டமை). போன்ற நடைமுறை உதாரணங்களுடன் விவரிக்க வேண்டும்.

(iv) அமுக்கக் குழுக்கள் (Pressure Groups)

- ஒரு ஜனநாயக நாட்டில் காணப்படும் விசேட அரசியல் நிறுவனங்களாக அமுக்கக் குழுக்களை அடையாளப்படுத்தலாம். தமது குறிப்பிட்ட அல்லது தனிப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக, அதிகாரத்திலுள்ள அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுக்கும் நோக்கில் ஒன்றிணைந்த மனிதர்களின் குழுக்கள் அமுக்கக் குழுக்கள் எனப்படும். (உதாரணம்: விவசாயச் சங்கங்கள், தோட்ட உரிமையாளர் சங்கம், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்).
- அமுக்கக் குழுக்கள் தமது நோக்கங்களை அடைய அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கப் பின்வரும் வழிமுறைகளைக் கையாளுகின்றன: (உதாரணம்: ஆர்ப்பாட்டங்கள், வேலைநிறுத்தங்கள், சத்தியாக்கிரகங்கள், மகஜர் சமர்ப்பித்தல்).
- இவை ஜனநாயகத்தின் ஒரு விசேட அங்கமாகும். ஐரோப்பிய மற்றும் அமெரிக்கச் சமூகங்களில் இவை பற்றி விரிவாக ஆராயப்படுகிறது.

  பிரித்தானியாவில் - அழுத்தக் குழுக்கள் (Pressure Groups)

  அமெரிக்காவில் - ஆசைக் குழுக்கள் (Interest Groups) / நியாயப் பிரச்சாரக் குழுக்கள் (Lobby Groups)

- தொழில் சங்கங்கள் (Trade Unions) தூய அர்த்தத்தில் அமுக்கக் குழுக்களாகக் கருதப்படுவதில்லை எனினும் அவையும் அழுத்தங்களை பிரயோகிக்கின்றன. அரசியல் கட்சிகளுக்கும் அமுக்கக் குழுக்களுக்கும் இடையே பல வேறுபாடுகள் உண்டு.

அமுக்கக் குழுக்கள் காணப்படுவதன் நன்மைகள்:

- அரசாங்கத்தின் கொள்கை உருவாக்கத்திற்குத் தேவையான தகவல்களை வழங்கி, கொள்கை உருவாக்கத்தில் பங்கெடுத்தல்.
- சமகாலப் பிரச்சினைகள் குறித்துப் பொதுமக்களை விழிப்புணர்வுடன் வைத்திருத்தல்.
- அரசாங்கத்தின் தன்னிச்சையான தீர்மானங்களையும் நடத்தைகளையும் கட்டுப்படுத்தல் (தடுத்தல்).
- ஜனநாயகத்தைப் பலப்படுத்தல்.
- அரசியல் கட்சிகளால் கவனம் செலுத்தப்படாத பிரச்சினைகள் குறித்துச் சமூகத்திற்கும் அரசாங்கத்திற்கும் விழிப்புணர்வூட்டல்.

தீமைகள்:

- அமுக்கக் குழுக்களில் இணைபவர்களும் அதற்குத் தலைமை தாங்குபவர்களும் பெரும்பாலும் சமூகத்தின் உயர்குழாமினராக (Elite) இருத்தல்.
- குறுகிய நலன்களை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்துவதால் பெரும்பான்மை மக்களின் நன்மைக்கு அது தடையாக அமைதல்.
- அரசாங்கத்தின் கொள்கைகளைத் தமக்குச் சாதகமாகத் திருப்ப முற்படுதல்.
- மக்களிடமிருந்து இக்குழுக்களுக்கு நேரடி ஜனநாயக அங்கீகாரம் கிடைக்காமை.
- சில வேளைகளில் சொத்துக்கள், உயிர்கள் அழியவும் நாட்டின் பொருளாதார நிலை சீர்குலையவும் இவற்றின் தீவிரப் போராட்டங்கள் காரணமாக அமைதல்.

(v) மத்தியஸ்தம் (Mediation):

மத்தியஸ்தம் என்பது மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினருக்கு இடையே விவாதத்திற்குரியதாகக் காணப்படும் பிரச்சினைகள் குறித்து, இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வை எட்டும் நோக்கில், ஒரு மூன்றாம் தரப்பு (Third Party) முன்வந்து மேற்கொள்ளும் ஓர் இடைக்காலச் செயற்பாடாகும். மத்தியஸ்தம் என்பது ஒரு குறிப்பிட்ட தருணத்தில் நிகழும் ஒரு செயல் அன்று, மாறாக அது ஒரு தொடர்ச்சியான செயற்பாடாகும் (Process). அது பல கட்டங்களைக் கொண்டது:

- ஆரம்பத்தில் மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினருக்கு இடையே ஒரு செய்திப் பரிமாற்றியாகச் செயற்படல்.
- அவர்களுக்கு இடையே நேர்மறையான கருத்துப் பரிமாற்றத்திற்குத் தேவையான தொடர்பாடல் ஊடகமாக அமைதல் மற்றும் அதற்கு ஆதரவளித்தல்.
- மோதலுக்கான மாற்றுத் தீர்வுகளைப் பற்றிச் சிந்திப்பதற்குத் தரப்பினருக்கு உதவுதல்.
- மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினரைப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருதல் மற்றும் பேச்சுவார்த்தைகளின் போது தலைமைத்துவப் பணியை ஆற்றுதல்.
- கலந்தாலோசனைகளின் போது ஏற்படும் சிக்கலான விடயங்களைத் தீர்ப்பதற்குத் தரப்பினருக்கு உதவுதல்.
- பேச்சுவார்த்தையில் ஈடுபடும் தரப்பினரின் பொது ஊடகப் பேச்சாளராகச் செயற்படல்.
- சமாதான ஒப்பந்தத்தை வரைவதற்கு (Drafting) உதவுதல்.
- சமாதான ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த, தரப்பினர் கோரும் உதவிகளை வழங்குதல்.

(மத்தியஸ்தம் குறித்து உலகளவில் காணப்படும் நடைமுறை உதாரணங்களை வழங்கி மாணவர் விவரிக்க வேண்டும்).